விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 23 வெள்ளிக்கிழமை (09.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

வடக்கு கிழக்கு இணைப்பு * பொலீஸ் விவகாரம் * காணி அதிகாரம்

# பிரச்சினையான மூன்று கோரிக்கைகளை ஒதுக்கிவிட்டு பேச்சுவார்த்தைக்கு வாருங்கள்

## கூட்டமைப்புக்கு அரசு பதில்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வடக்கு கிழக்கு இணைப்பு, பொலிஸ் அதிகாரம், அரச காணிகளை மாகாண சபைகளுக்கு உரித்தாக்குதல் ஆகிய மூன்று விடயங்களையும் ஏற்றுக் கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. எனவே இம் மூன்று சர்ச்சைக்குரிய கோரிக்கைகளையும் ஒதுக்கிவைத்து விட்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பதிலளித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)


## மூன்று விடயங்களை நிராகரித்தால் பேச்சு நடத்துவதில் அர்த்தமில்லை

### கூட்டமைப்பு கருத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணசபைக்கான அதிகாரங்களைப் பகிர்தல் விடயங்களை அரசு நிராகரித்தால் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லையென அக்கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் (19ஆம் பக்கம் பார்க்க)



## ஆணைக்குழு அறிக்கை விடயத்தில் சில தரப்புக்கு முறையற்ற அவசரம்

### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் ஜனாதிபதி ஆராய்ந்து வருகிறார். இந்த நிலையில் அந்த அறிக்கை கூட்டலோ, கழித்தலோ இன்றி அப்படியே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எனினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் சில தரப்பினர் ஏன் முறையற்ற வகையில் அவசரம் காட்டவேண்டும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு, கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுற்பகல் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட அமைச்சர் ஹெகலியவிடம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய தளபதிகளுடன் இராணுவத் தளபதி பேச்சு

புதுடில்லி சென்றுள்ள இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இந்திய இராணுவத்தின் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குபற்றி வருகிறார். அத்துடன் இந்தியாவின் முப்படைகளினதும் தளபதி மற்றும் பிரதித்தளபதிகளையும் அவர் சந்தித்து பேசியுள்ளார்.

இந்திய இராணுவத்தளபதி ஜெனரல் வி.கே. சிங், கடற்படைத்தளபதி அட்மிரல் நிர்மல் வர்மா, விமானப்படைத் தளபதி எயர் சீப் மார்சல் பிறவுண், இந்திய இராணுவத்தின் துணைத்தளபதி லெப்.ஜெனரல் எஸ்.கே.சிங் ஆகியோருடன் இராணுவத் தளபதி பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களின் போது இரு நாடுகளினதும் படையினருக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளுதல், பயிற்சி வசதிகளை அதிகரித்தல் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக புதுடில்லித் தகவல் தெரிவிக்கின்றன. (பா)

## சர்வாதிகாரிகளை விரட்ட சர்வதேச ஒத்துழைப்பு வேண்டும்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சர்வாதிகாரிகளை விரட்டியடிப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு சிறைச்சாலை உத்தியோகஸ்தர்களும் அஞ்சுகின்றனர் என்று தெரிவித்துள்ள சரத் பொன்சேகா, உலகம் முழுவதிலும் சர்வாதிகாரிகளை சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து விரட்டியடித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

.அமைச்சர் மேர்வின் சில்வாவின் நடவடிக்கைகளுக்கு அச்சம் கொண்டு சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் ஊடகவியலாளர்களை விரட்டுகின்றனர். வீடியோ கமராக்கள் அனைத்தையும் வீசி எறிய முயற்சிக்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## கணவன்-மனைவி வெட்டிக்கொலை நீர்வேலியில் நேற்றிரவு பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

காணிப் பிரச்சினையால் ஏற்பட்ட முறுகல் நிலையில் ஒருவர் தமது சகோதரியையும் மைத்துனரையும் கொடூரமாக வெட்டிக் கொலை



செய்த சம்பவம் ஒன்று நேற்றிரவு 8.15 மணியளவில் நீர்வேலி இராசபாதை வீதியில் இடம் பெற் றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு உதயகுமார் (வயது 50) அவரது மனைவி வசந்தமலர் (வயது 45) என்ற நான்கு பிள்ளைகளின் பெற்றோரே கொலை செய்யப்பட்டுள்ளனர். (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறீரங்கம் ரெக்ஸ்ரைல்ஸ்

நத்தார் பண்டிகையை முன்னிட்டும், இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டும் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு தனியான காட்சியறையில் புதிய மொடல் றெடிமெட் சல்வார் மற்றும் சுடிதார் துணி வகைகளையும் 13 நாட்களுக்கு விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். மேலும் அனைத்து தரப்பினருக்குமான நியூமொடல் ஆடை வகைகளையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

காலம் - 12 முதல் 25 வரை





சிறீரங்கம் ரெக்ஸ்ரைல்ஸ்
வதிரி வீதி, உடுப்பிட்டி
தொலைபேசி: 0213737455
(C-5137)


# ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பழமைவாய்ந்த நாடு!

## ஜனாதிபதி தெரிவிப்பு



(பாலி)

ஆசியாவில் மாத்திரமல்ல முழு உலகத்திலுமே ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தும் நாடுகளில் இலங்கையே மிகவும் பழைமைவாய்ந்த நாடாகும்.

அர்த்தமுள்ள ஜனநாயத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்றால் பொதுமக்களுக்கும் அரசுக்கும் இடையே நெருங்கிய உறவுகள் காணப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தோனேசியாவில் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் ஆரம்பமான பாலி ஜனநாயக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பு மற்றும் தேர்தல் முறைமை தொடர்பான அனுபவங்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியமான சந்திஷ்டானங்களாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## சர்வாதிகாரி...

சரத் பொன்சேகா அரசாங்கத்திற்கெதிராக ஊடகங்களில் கருத்து வெளியிட்டு வருவதாகவும் அவரை தன்னிடம் ஒப்படைக்குமாறும் அமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் தெரிவித்த கருத்துக்கே அவர் இவ்வாறு தொரிவித்துள்ளார்.

கொழும்பு தனியார் வைத்தியாலையில் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக நேற்று சென்றிருந்த போதே சரத் பொன்சேகா இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (பா)

## கணவன்...

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது காணிப் பிரச்சினை காரணமாக கடந்த சில மாதங்களாக நிலவி வந்த முறுகல் நிலையில் நேற்றிரவு இராச பாதையில் சென்ற தனது சகோதரியையும் மைத்துனரையும் வழிமறித்த பிரஸ்தாப கொலையாளி கூரிய ஆயுதங்களால் வெட்டிக்கொலை செய்துவிட்டு தப்பித்துள்ளார். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா-1)

## மக்களுடனான கூட்டம்

யாழ் . மாநகர சபையால் நடத்தப்படும் ஜே / 71 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டமின்று மாலை பிற்பகல் 4.00 மணிக்கு குருநகர் மவுன்காமல்மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா கேட்டுள்ளார்.(பா)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு அதிபர் மு. முரளிதரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். இந் நிகழ்வில் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ந)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2011.11.21 திகதி அன்று நடைபெற்ற பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் பெற்ற எமது கல்லூரியில் முகாமைத்துவ உதவியாளராக (தற்காலிகம்) கடமையாற்றும்

செல்வி செல்வராசா மயூரி (BA)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், ஊழியர்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்.
(6936)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சண்டிலிப்பாய்
இந்துக் கல்லூரி
5ஆம் ஆண்டு
புலமைப் பரீட்சை
புள்ளி 168

இரவிச்சந்திரன் நிருபனா

வாழ்த்துவோர்:
திரு. திருமதி ஜெயநாதன் சுபாஜினி குடும்பத்தினர்
219, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(6932)








# <BARATHY>

சித்தன்கேணி

**புதிய வகுப்புகள்**

தரம் 6 தொடக்கம் O/L வரை:-
நாளை ஆரம்பம் :-10.12.2011 சனி காலை 8.00 மணி
எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரிய குழுவினால்

| | |
|---|---|
| விஞ்ஞானம் தேவா, ஜெயரூபன் | கணிதம் சிவரூபன், சிவா |
| தமிழ் குகபரன், கஜிதரன் | வரலாறு சுதன், நிஜகரன், பிரதாப் |
| ஆங்கிலம் விஜயபாஸ்கர், மனோகரன் | சமயம் N.T. தரன், பாகுதரன் |
| வர்த்தகம் திருக்குமரன் | சுகாதாரம் பார்த்தீபன் |
| விவசாயம் விஸ்னுதேவன் | நாடகம் கஜிதரன் |
| குடியியல் சிவபாலன் | புவியியல் சர்வேஸ்வரன் |

- மேல் குறிப்பிட்ட இப் பிரபல ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் எமது நிறுவனம் தவிர்ந்து வேறு எந்த கல்வி நிறுவனத்திலும் கற்பிக்கப்பட மாட்டார்கள்
- மாணவர் தொகை சென்றாண்டு போல் இவ்வாண்டும் வரையறுக்கப்பட்டவை.
- தரம் 9;10 வகுப்புக்களுக்கு 90 மாணவர்களுக்கும்
- தரம் 6, 7, 8 வகுப்புக்களுக்கு 50 மாணவர்களுக்கும் அனுமதிகள் வழங்கப்படும்.
- உங்கள் அனுமதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புக்கள் நடைபெற இருப்பதால் உங்கள் அனுமதிகளை தாமதியாது உடன் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர், ஆசிரியர்கள்.



# வேலை ஆள் தேவை

கணனி அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை.

**அம்மா ஸ்ருடியோ**
No.28, வேம்படி றோட்,
யாழ்ப்பாணம்.
(6929)

TP. No: 077 711 1530
021 222 1155



உ

பகவானே மௌனமேனோ



அரியாலை மேற்கினிலே
நாகுபிள்ளை - தங்கம்மா தம்பதியினரின்
அரிய ரத்தினங்கள் இவரில்
அரியரத்தினமாய் அவனியிலே அவதரித்து
தந்தையை இழந்து நாம் தவித்தபோது
பள்ளிப்பருவத்திலேயே தலைமைப்
பொறுப்பேற்று எம்மை எல்லாம்
தலைநிமிர வைத்து - உன் இல்வாழ்வில்
கமல நாயகியை நாயகனாய் கைப்பிடித்து
நாயகியாம் மனைவிக்கும் , இவர்க்கும்
அப்பாவாக இருந்து - சிறந்ததொரு
நிர்வாகம் புரிந்து விட்டு - அரச
நிர்வாக உத்தியோகத்தர் பதவிதனில் இருந்து
ஆறுதல் அடையாது அறுபது ஆகுமுன்னர்
ஐம்பத்தி ஆறுதனில் ஆறுதல் அடைந்து
மௌனமாய் போனதேனோ பகவானே.....
உன் ஆத்மா சாந்திக்காக இறையருள் வேண்டி நிற்கின்றோம்.
சாந்தி சாந்தி சாந்தி

சகோதரங்கள்
மனைவி/ பிள்ளைகள்
81, பலாலி வீதி. யாழ்ப்பாணம்

தொலைபேசி: 0774290859
(C-5139)

# இன்று ஒரு தகவல்

## தேடல்

ஒருத்தருக்கு கடவுளைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அதற்கு என்னென்னமோ செய்து பார்த்தார். ஒன்றும் சரியாக வரவில்லை. அந்தச் சமயம் பார்த்து ஆதிசங்கரர் அந்த ஊருக்கு வந்தார். இவர் உடனே அவரிடம் சென்று "நான் கடவுளைப் பார்க்க வேண்டும். அதற்கு ஒருவழி சொல்லுங்கள்" என்றார்.

அதற்கு இவர், "நீ தனிமையான இடத்தில் உட்கார்ந்து இறைவனை நினைத்து தியானம் செய். கடவுள் காட்சி கொடுப்பார்" என்றார்.

உடனே இவர் ஒரு காட்டுக்குப் போனார். கண்ணை மூடி உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தார்.

"ஏய்... யார் நீ... இங்கே என்ன செய்கிறாய்?" என்று ஒரு குரல் கேட்டது. இவர் கண்ணைத் திறந்து பார்த்தார். பக்கத்தில் ஒரு வேடன் நின்றுகொண்டிருந்தான். அவன் மறுபடியும் கேட்டான்.

"இங்கே என்ன செய்கிறாய்?" என்றான்.

"நான் இறைவனைத் தேடி தியானம் செய்து கொண்டிருக்கிறேன்" என்றார்.

"இறைவனா? அது எப்படியிருக்கும்? சிங்கம், புலி, கரடி மாதிரி இருக்குமா? எப்படி இருக்கும் சொல்? எனக்குத் தெரியாமல் இந்தக் காட்டில் எதுவும் இல்லை. நீ விபரத்தைச் சொல். நான் பிடித்துக் கொண்டு வருகிறேன்" என்றார்.

அவருக்கு சங்கடமாகி விட்டது. "இவன்... விபரம் தெரியாத ஆளாக இருக்கிறான். தியானத்திற்கு வேறு இடஞ்சலாக இருக்கிறான். இவனுடைய தொந்தரவிலிருந்து எப்படி மீளுவது?" என்று யோசித்தார்.

உடனே அவனிடம் சொன்னார். "இதோ பாரப்பா... இறைவன் எப்படி இருக்கும் என்று கேட்டாய் அல்லவா? அதன் தலை சிங்கம் மாதிரி இருக்கும். உடம்பு மனிதன் மாதிரி இருக்கும். அதாவது மனித உடம்பில் சிங்கத்தின் தலை! எங்கேயிருந்தாலும் பார்த்துக் கொண்டு வா" என்றார்.

சரி கொண்டு வருகிறேன் என்று சொல்லி அவன் புறப்பட்டான். காலையில் புறப்பட்டவன் காடு பூராகவும் தேடி அலைந்தான். மாலை ஆகிவிட்டது. மிகவும் களைத்துப்போய்விட்டான்.

"நான் இந்தக் காட்டுக்கு ராஜா! என்னாலேயே கண்டுபிடிக்க முடியவில்லையே... இதன்பின்னரும் நான் உயிரோடு இருக்க வேண்டுமா?" என்று யோசித்தான். உடனே அங்கே இருந்த ஒரு கொடியைப் பறித்தான். அதை தூக்குக் கயிறு போல் ஒரு மரத்தில் கட்டினான். தற்கொலை செய்து கொள்வதற்காக அதில் கொண்டு போய் தலையை விட்டான்.

அந்த நேரம் பார்த்து பக்கத்தில் இருந்த ஒரு புதரில் இலேசாக ஒரு சலசலப்பு. என்னவென்று திரும்பி பார்த்தால் அங்கே ஒரு உருவம் நின்று கொண்டிருந்தது. அதற்குமனித உடம்பு. சிங்கத்துடைய தலை.

"அடடா! உன்னைத்தானே இவ்வளவு நேரமாகி தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று இறங்கி ஓடி வந்தான்.

அதை அந்த கொடியால் சுற்றிக் கட்டி இழுத்துக் கொண்டு அந்த பெரியவரிடம் வந்தார்.

"இதோ பார்... நீ சொன்ன மிருகத்தை கொண்டு வந்துவிட்டேன்" என்றான். இவருக்கு ஒன்றும் புரியவில்லை. கண்ணைத்திறந்து பார்த்தார். அந்தரத்தில் அந்த கொடி ஏதோ ஒரு உருவத்தை சுற்றியிருப்பது தெரிந்தது. உடனே வந்திருப்பது இறைவன் தான் என்று புரிந்து கொண்டார். அந்த திசையை நோக்கி வணங்கினார்.

"இறைவா! இங்கே நான் உன்னை நினைத்து தியானம் செய்து கொண்டிருக்கிறேன். என்னை விட்டுவிட்டு இந்த உயிரைக் கொள்ளுகின்ற வேடனுக்கு காட்சி கொடுத்திருக்கிறாயே இது நியாயமா?" என்றார்.

அப்போது அசரிரீதியாக அந்த குரல் கேட்டது. இறைவன் சொன்னார். "நீ என்னையே நினைத்தாலும் உன்னுடைய முழு மனதும் என்னிடம் வரவில்லை. ஆனால், இந்த வேடன் காலையிலிருந்து மாலை வரைக்கும் என்னை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தான். தண்ணீர் கூட குடிக்காமல் முழு மனதுடன் என்னைத் தேடினான். இதுதான் உண்மையான தேடல். அதனால்தான் அவனுக்கு காட்சி கொடுத்தேன்" என்றார்.

இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்... எந்தவொரு 'உண்மையை' தேடினாலும் அப்படித் தேடுவது உண்மையான தேடலாக இருக்க வேண்டும் என்பதுதான். திருவிழா நடந்து கொண்டிருந்தது. அதிக சனக் கூட்டம். ஒரு பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலி திருட்டுப் போய் விட்டது. திருடனை எல்லோரும் தீவிரமாகத் தேடிக் கொண்டிருந்தார்கள். மும்முரமாக தேடிக் கொண்டிருந்த ஒருவர் சொன்னார். "எவ்வளவு தான் உண்மையாக தேடினாலும் கூட அந்தத் திருடன் கிடைக்கமாட்டான் என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது"

"எப்படி சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் பக்கத்திலிருந்தவர். அவர் காதோடு காதாக இவர் சொன்னார். "இப்பொழுது நாம் எல்லாம் தேடிக் கொண்டிருக்கிறது என்னைத்தான்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழில் 10ஆயிரத்து170 குடும்பங்கள் மீள்குடியமர்த்தபபட வேண்டும்

## யாழ்.செயலகத்தின் அறிக்கையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இன்னும் 10 ஆயிரத்து 170 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 442 பேர் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளனர் என மாவட்ட செயலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் யாழ்.மாவட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் இதுவரை மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 10 ஆயிரத்து 170 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 442 பேர் இன்னும் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளது.

இதில் நலன்புரி முகாம்களில் ஆயிரத்து 711 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 421 பேரும் உறவினர்கள், நண்பர்களுடன் 8 ஆயிரத்து 459 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 21 பேரும் தங்கியுள்ளனர்.

இதில் நெடுந்தீவில் 44 குடும்பங்களைச் சேர்ந்த 111 பேரும் வேலணையில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 104 பேரும் ஊர்காவற்றுறையில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும் காரைநகரில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 281 பேரும் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 318 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 442 பேரும் நல்லூரில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 115 பேரும் சண்டிலிப்பாயில் 142 குடும்பங்களைச் சேர்ந்த 512 பேரும் சங்கானையில் 441 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 595 பேரும் உடுவிலில் 140 குடும்பங்களைச் சேர்ந்த 514 பேரும் தெல்லிப்பழையில் 7 ஆயிரத்து 42 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 266 பேரும் கோப்பாயில் 129 குடும்பங்களைச் சேர்ந்த 446 பேரும் சாவகச்சேரியில் 136 குடும்பங்களைச் சேர்ந்த 447 பேரும் பருத்தித்துறையில் 96 குடும்பங்களைச் சேர்ந்த 228 பேரும் மருதங்கேணியில் 532 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 373 பேரும் இன்னும் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளனர் என அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.(அ-6)

# தரம் 6 மாணவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கல்

தெங்கு அபிவிருத்தி அமைச்சினால் துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6 இல் கல்வி பயிலும் 643 மாணவர்களுக்கு தலா இரண்டு தென்னங்கன்றுகள் வீதம் ஆயிரத்து 286 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத் தென்னங்கன்றுகள் தற்பொழுது தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்குமாறும் இத்தென்னங்கன்றுகளை மாணவர்கள் வளர்த்து க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு வருகின்ற போது புலமைப்பரிசில்களை வழங்குவதற்காகவும் அவர்களுடைய பராமரிப்புக் காலத்தின் போது ஏற்படுகின்ற நோய்த்தாக்கங்களுக்கான பராமரிப்புகளையும் தெங்கு அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ளப்படவுள்ளது. இத்தென்னங்கன்றுகள் தற்பொழுது துணுக்காய் கல்வி வலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவை அதிபர்கள் ஊடாக பாடசாலைகளில் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.(அ-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 220 | 350 | 200 |
| தக்காளி | 140 | 200 | 70 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 30 | 25 |
| கோவா | 70 | 90 | 70 |
| கரட் | 70 | 120 | 80 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 90 | 50 |
| வாழைக்காய் | 35 | 50 | 35 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 60 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 80 |
| பாகற்காய் | 80 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | -- |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 50 | 90 | 60 |
| பீற்றூட் | -- | 70 | -- |
| கறிமிளகாய் | -- | 180 | 150 |
| முருங்கைக்காய் | -- | -- | 120 |
| போஞ்சி | -- | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 35 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 18 | 50 | 40 |
| தேசிக்காய் | 120-130 | 150 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 25 |

# இராசி பலன்

*09.12.2011*
*(கார்த்திகை 23; வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு*
*சதுர்தசி முன்னிரவு 7.19 மணிவரை*
*கார்த்திகை மாலை 5.32 மணிவரை*
*இராகுகாலம் 10.48-12.18 மணிவரை*
*சுபநேரம் 6.18-7.48 மணிவரை*
*விஷ்ணுவாலய தீபம்.*

**மேடம்** இனிமையான செய்திகள் இல்லம் தேடி வந்து சேரும் நாள், தொழில் முன்னேற்றமுண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு.

**இடபம்** பெண்தெய்வ வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பல நாட்களாக பார்காமலிருந்த உறவினர் ஒருவரை திடீரென சந்திக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, கூடுதல் பொறுப்புக்களால் பம்பரமாகச் சுழன்று பணி புரிய வேண்டி வரலாம்.

**கடகம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்களில் வெற்றி காண்பீர்கள், செய் தொழிலால் வருமானம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள், அந்நியர்களால் உதவிகள் கிடைக்கலாம், தொழில் முன்னேற்றமுண்டு.

**கன்னி** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும், உடல் நலம் சீராகும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** எதிலும் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்தில் கோபமாப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்த வேண்டி வரலாம்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்கள் கைகூடும், ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், நண்பர்களுக்காக செலவு செய்யும் சூழ்நிலை உண்டு, குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**தனுசு** சுவாரஸ்யமான நாள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், தடைகள் உடைபடும் நாள்.

**மகரம்** புத்திரர்களின் தேவைகளை நிறைவு செய்து மகிழ்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை செய்து முடிப்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தொழில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மீனம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், இழுபறியாக இருந்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், உறவினர் வருகையுண்டு, சுவாரஸ்யமான நாள்.

வளவன்

# தேசிய பதாதைப் போட்டிகளில் யாழ்ப்பாணத்துக்கு 2 இடங்கள்

(யாழ்ப்பாணம்)

2011 ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடத்திய மத நல்லிணக்கம் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் மனித உரிமைகள் பேணப்படும் சமுதாயம் எனும் தொனிப் பொருளில் நடத்திய பதாதைப் போட்டியில் தேசிய மட்டத்தில் யாழ். மாவட்டத்திற்கு இரண்டாம்,மூன்றாம் இடங்கள் கிடைத்துள்ளன.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கொழும்பில் உள்ள இலங்கை மன்ற கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியர் ம.கணேஷனந்தன் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும்,விக்டோரியா கல்லூரி மாணவன் குணராசா கபில்ராஜ் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியை சின்னத்தம்பி யோகேஸ்வரி, இணுவில் இந்துக்கல்லூரி ஆசிரியை செம்பலங்கம் ஜெகம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலய ஆசிரியர் சிற்றம்பலம் சிவஞானராசா ஆகியோர் சான்றிதழ் பெறுகின்றனர். (எ-11)

# 2012 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியம் வழங்கப்படவுள்ள திகதிகள் அறிவிப்பு

(பருத்தித்துறை)

ஓய்வூதிய திணைக்களத்தினால் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு ஓய்வூதியம் வழங்கப்படும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி , பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி, மார்ச் மாதம் 8 ஆம் திகதி, ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி,மே மாதம் 9 ஆம் திகதி, யூன் மாதம் 7 ஆம் திகதி, யூலை மாதம் 10 ஆம் திகதி, ஒகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி, செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி,ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி, நவம்பர் மாதம் 8 ஆம் திகதி, டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஆகிய தினங்களில் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

எனவே உரியவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் குறித்த தினங்களில் சென்று ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(அ-3-10)

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வேறு சில பொருட்களும் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களுக்கு உடன் பணம் செலுத்திய பின்னரே நீதிமன்றத்திலிருந்து அப்புறப்படுத்த முடியும் என்றும் ஏலத்தில் பொருட்களை கோருபவர்கள் தேசிய அடையாள அட்டை கொண்டு வர வேண்டும் எனவும் மல்லாக மாவட்ட நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (அ)

# அண்ண உதட்டுபிளவு இலவச சத்திரசிகிச்சைக்கான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்வைத்தியபீடமும் ஸ்மைல் ரெயின் தொண்டு நிறுவனமும் இணைந்து அண்ண உதட்டு பிளவு சத்திரசிகிச்சையினை முற்றிலும் இலவசமாக வழங்கவுள்ளது.

இச்சிகிச்சை தேவைப்படும் வசதி குறைந்த, ஆதரவற்ற குழந்தைகள் தொடர்பிலான பெயர், வயது, விலாசம், தொலைபேசி இலக்கம் என்பனவற்றை அனுப்பி சிகிச்சைக்கான, பிரயாண, தங்குமிட வசதிகளை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இக்குறைபாடு சிகிச்சையளிக்க முடியாத ஒன்று அல்ல என்றும் இச் சிகிச்சையின் மூலம் இதனை சீர்செய்ய முடியும் என்றும் சிகிச்சைப்பிரிவு கூறியுள்ளது.

இச்சிகிச்சைக்கு செல்ல விரும்புவர்கள் சங்கானை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.கோகுலனுடன் தொடர்பினை ஏற்படுத்தி சிகிச்சையினை இலவசமாக மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆய்வு கூட உதவியாளர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

வடமாகாண பாடசாலைகளில் ஆய்வு கூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 100 பேர் ஆய்வுகூட உதவியாளர்கள் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச்செயலாளர் க.சிவகரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் கீழ் 12 கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆய்வு கூட உதவியாளர்களுக்கான இரண்டு நாள் வதிவிட செயலமர்வு கடந்த 6ஆம் ,7ஆம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற போது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மெற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் உள்ள ஆய்வு கூடங்களில் பயன்பாடு மாணவர்களது விஞ்ஞானக் கல்விக்கு இன்றியமையாதது.

இதில் கடமையாற்றும் ஆய்வு கூட உதவியாளர்களாகிய நீங்கள் பாடசாலைகளில் ஆய்வுகூடத்தைப் பூரணமாக மாணவர்கள் பயன்பெற உதவ வேண்டும்.

விஞ்ஞானத்தில் ஆர்வமுள்ள மாணவன் ஏனைய பாடங்களையும் இலகுவாக கற்க கூடியதாக இருக்கும்.

எனவே ஆய்வுகூட உதவியாளர்களாகிய நீங்கள் எதிர்காலத்தில் எமது பிரதேசங்களில் பல வைத்தியர்கள் பொறியியலாளர்கள் உட்பட தொழிசார் உத்தியோகத்தர்கள் ஆகியோரை உருவாக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-15)

# கலந்துரையாடல்

யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரி பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் மு.மகேந்திரன் கேட்டுள்ளார். (அ)

# 'ஆளுமை' திரைப்பட வெளியீட்டு விழா

குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தின் ஆளுமை வீடியோ திரைப்பட வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சென் ஜோன்ஸ் கல்லூரி முன்னாள் உப அதிபர் யே.அமலசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வெளியீட்டிற்கான வெளியீட்டுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா , ஆய்வுரையை சமாதான நீதவான் கலாபூசணம் வைரமுத்து சிவபாலன், ஆசியுரையை குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஆர்.சி.எக்ஸ்.நேசராஜா அடிகளும் ஆற்றவுள்ளனர். (அ)

# பாலர் பாரமரிப்பு நிலைய வருடாந்த கலைவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பாராமரிப்பு நிலைய வருடாந்த கலைவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை.8.30 மணிக்கு தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா,வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் த.குகதாசன், டாக்டர் செ.அம்பிகைபாகன், தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன், யாழ்.மாவட்ட சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் க.சிவகரன், தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சு.பாக்கியராசா மக்கள் வங்கி சாவகச்சேரி கிளையின் முகாமையாளர் க.சண்முகலிங்கம்,செலான் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் சி.சந்திரகுமார், இலங்கை வங்கி சாவகச்சேரி முகாமையாளர் கே.சேதுகாவலர், தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் திருமதி தீபா மஞ்சுரன், சாவகச்சேரி நகர் கிராமஅலுவலர் வி.சிவசுரணநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.




இந்நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகளும் மாணவர் கௌரவிப்பும் இடம் பெறவுள்ளது. (அ-3-29)

# தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் நிவாரண கொடுப்பனவுக்கு தெரிவானோர்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்திலுள்ள சமூக சேவைகள் பிரிவில் சுயதொழில் நிவாரண கொடுப்பனவுக்கு விண்ணப்பித்த 27 பயனாளிகளுக்கும் தற்செயல் நிவாரண கொடுப்பனவுக்காக விண்ணப்பித்த 2 பேருக்கும் நலிவுற்றோருக்கான சுயதொழில் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்த 2 பேருக்கும் முதலாம் கட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

**சுயதொழில் கொடுப்பனவுக்கு**

க.சுபத்திரா (கைதடி தெற்கு), கி.கிருஷ்ணாகரன் (கைதடி மத்தி) , ச.பாலேஸ்வரி (கைதடி தெற்கு),வெ.கலைமகள் (நாவற்குழி), பொ.பரமேஸ்வரி சார்பாக செ.பொன்னம்பலம் (மறவன்புலோ தெற்கு), இ.சிவகுமார் (சங்கத்தானை), க.ரவிசங்கர் (கச்சாய் வீதி), தி.நவநாயகி ( கோவிற்குடியிருப்பு ), நி.சுபாசினி (கீச்சாய் வீதி), ச.கௌநித்தி (கோவிற்குடியிருப்பு), செ.சந்திரசேகரனுக்குப் பதிலாக ச.அனுசியா (கச்சாய் வீதி),அ.ஜீவராணி (கல்வயல்),நா.சுந்தரலிங்கம்(நுணாவில் கிழக்கு), பா.லில்லி (நுணாவில் மத்தி), ஜீ.ஞானஜோதி (நுணாவில் மேற்கு ), கி.தங்கம்மா (நுணாவில் மேற்கு), த.சுரேஸ்குமாருக்குப் பதிலாக சு.ஜான்சிராணி (நுணாவில் மேற்கு), ம.மோகன் (மட்டுவில் தெற்கு), பி.உதயதர்சினி (மீசாலை வடக்கு கொடிகாமம்), சி.கிரிஜா (கச்சாய் தெற்கு), சி. நாகமுத்து சார்பாக சி.சோதீஸ்வரி ( தவசிக்குளம்), உ.சறோஜாதேவி (கச்சாய் வீதி), க.ஞானகுரு (கெற்பேலி மேற்கு), நியூட்டன் அன்ரனிஸ்ரா (மிருசுவில் தெற்கு), நா. நாகரஞ்சன் (மந்துவில் மேற்கு ), ந.சசிகலா (மந்துவில் மேற்கு ), து.மதிவதனி (மந்துவில் கிழக்கு) ஆகியோரும்

**தற்செயல் நிவாரண கொடுப்பனவுக்கு**

ந.ஜெயராணி (இயற்றாலை), செ. தியாகக்கிளி (சிவன் கோவிலடி) ஆகியோரும்

**நலிவுற்றோருக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்கு**

தனராசா கௌசி (மீசாலை மேற்கு), செல்வக்குமார் தவரஞ்சினி (மட்டுவில் மத்தி) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனவே தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி தென்மராட்சி செயலகத்தில் உள்ள சமூக சேவைகள் பிரிவிற்கு அடையாள அட்டையுடன் சமுகமளிக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் அறிவித்துள்ளார். (அ-3-29)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை 21 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றில்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுமென தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குரிய விசாரணை பொறிமுறை தொடர்பான சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்கும் பொருட்டு உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டது.

இந்த ஆண்டுக்கான நாடாளுமன்ற இறுதித் தொடரில் ஜனாதிபதியினால் இவ்வறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுமென சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையிலிருந்து அரசாங்கம் கருத்திலெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து மஹிந்தவினால் விளக்கமளிக்கப்படும் இறுதி அறிக்கையின் முழுவடிவம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுமா அல்லது குறிப்பிட்ட சில பரிந்துரைகள் மட்டும் முன்வைக்கப்படுமா என்பது இதுவரை அறியப்படவில்லை.

உள்நாட்டுப் போரில் நடந்தேறிய சம்பவங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீ மூனின் இலங்கைப் பயணத்தின் போது வலியுறுத்தப்பட்டதன் அடிப்படையிலும் சர்வதேச சமூகத்தின் தொடர் அழுத்தங்களை அடுத்தும் 2010 மே மாதம் ஜனாதிபதியினால் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு உரிய அதிகாரம் வழங்கப்படாமை மற்றும் அதன் மீதான இலங்கை அரசாங்கத்தின் அதீத தலையீடு என்பன ஏற்கனவே சர்வதேச சமூகத்தின் மத்தியில் குறிப்பாக மனித உரிமை அமைப்புக்கள் மத்தியில் அதனை நம்பகத்தன்மை அற்றதாக்கியிருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

# சமரசிங்கவை சந்திக்க ஐ.ரோ.எம்.பிக்கள் வருகை

ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. மனித உரிமை நிலைமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில் இந்தக் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அடுத்த அமர்வுகள் குறித்து இதன் போது பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

இக்குழுவினர் இலங்கை மனித உரிமை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். மனித உரிமைப் பாதுகாப்பு குறித்த செயற்றிட்டம் குறித்து அமைச்சர் சமரசிங்க இதன் போது விளக்கமளித்துள்ளார்.

பாராளுமன்ற பாராளுமன்றத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் ஹோவிட் டேவிட் மார்டின் மற்றும் அன்னா கோமஸ் ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். குறித்த ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவினர் வடக்கின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்துள்ளனர்.

இவர்கள் மெனிக்பாம் முகாமிற்கு விஜயம் செய்ய உள்ளதாக குறிப்பிடப்படுகிறது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்கள் முற்றுகை

(கொழும்பு)

ஐந்து மாகாணங்களில் கடந்த 11 மாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது 8 சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதுடன் 27 பேரை கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மேல் மாகாணம் மற்றும் தென், மத்திய, சப்ரகமுவ, வடமேல் ஆகிய மாகாணங்களிலேயே குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை அடையாளம் கண்டு அவற்றை தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளில் பொலிஸ் திணைகளம் ஈடுபட்டுள்ளதாக ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# உயர்தரப் பெறுபேறுகளை வெளியிடுவதில் சிக்கல்?

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சசின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தை இணக்கப்பாடின்றி முடிவடைந்துள்ளது.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உயர் கல்வி அமைச்சின் செயலாளர், பரீட்சைகள் ஆணையாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் நேற்று முன்தினம் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விதிகளை நிர்ணயிப்பது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவினருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்கவிற்கும் இடையில் நாளை சனிக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ள்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

புதிய மற்றும் பழைய பாட விதானங்களின் அடிப்படையில் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருப்பதால் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிக்கல் நிலைமைக்கு தீர்வு முன்வைக்கப்பட்டதன் பின்னர் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)


KALAIMAGAL International College

NOTHING IS IMPOSSIBLE

இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வட பகுதியில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் புலமை சுமார் 25 வருடங்களாகத் தொலைக்கப்பட்ட அல்லது அக்கறை கொள்ளாத ஒன்றாகவே காணப்படுகின்றது.



இன்றைய உலகமயமாக்கலில் ஆங்கில அறிவு மிக மிக இன்றியமையாததாகக் காணப்படுவதனால் ஆங்கில மொழி மூலக் கல்வியின் அவசியம் காலத்தின் கட்டாயமாகும். இதனைக் கருத்திற்கொண்டு எமது கல்லூரி வட பகுதியில் ஆங்கிலமொழி மூலக் கல்வியை உள்வாங்கும் பொருட்டு பல இடங்களில் தனது கிளைகளை நிறுவியுள்ளது. எமது கலைமகள் சர்வதேச கல்லூரியின் சிறப்பான செயற்றிட்டங்கள் வருமாறு:

- பாலர் வகுப்பு முதல் க.பொ.த. (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை ( English Medium )
- சிறந்த ஆங்கில மொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சாதாரண மக்கள் முகம்கொடுக்கக்கூடிய மிகக் குறைந்த அளவு கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலம் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் கற்பிக்கும் கல்விக் கொள்கை.
- அரச பாடசாலைகளின் நேரசூசி அமைப்பு.
- விளையாட்டு, கலை, கலாசாரம் நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடுகளாக உள்வாங்கும் கல்விக்கொள்கை.
- மாணவர்களை உற்சாகப்படுத்தும் வருடாந்த பரிசளிப்பும், கலைவிழாக்களும்.

மேற்குறிப்பிட்ட சிறந்த செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்கான அனைத்து வகுப்புகளுக்குமான விண்ணப்பங்கள் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு எமது தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்:

KALAIMAGAL International College
CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.
T.P.:021 4923235, 0778834592, 0774904286, 0776548283

NOTHING IS IMPOSSIBLE

(த-513)

# வெண்சந்தனத்தை கடத்த முற்பட்ட நால்வர் சுங்க பிரிவினரால் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து பாகிஸ்தானுக்கு சட்டவிரோதமான முறையில் வெண் சந்தனத்தை விற்பனை செய்ய முற்பட்ட நால்வர் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆடை ஏற்றுமதி மேற்கொள்ளும் பேழையில் 276 கிலோகிராம் வெண்சந்தனம் கொள்கலனில் அடைத்து கப்பலில் ஏற்றப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டதாக பிரதி சுங்கப் பணிப்பாளர் சாகரமஹாநாம குறிப்பிட்டுள்ளார்.

கப்பலில் ஏற்றப்பட்டிருந்த வெண் சந்தன தொகையுடனான கொள்கலன் கடந்த 29 ஆம் திகதி சுங்கப்பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ளது.

சுமார் 27 இலட்சம் ரூபா பெறுமதியான வெண் சந்தனத் தொகை, ஆடை கொள்கலன்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பிரதி சுங்கப் பணிப்பாளர் கூறினார்.

மருதானை பிரதேச வர்த்தகர் ஒருவரால் இந்த ஆடைக்கொள்கலன் பாகிஸ்தானுக்கு அனுப்புவதற்காக தயார் செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான பாகிஸ்தான் பிரஜை ஒருவரை கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(அ-2)

# நட்டத்தை தவிர்ப்பது குறித்து அமைச்சு செயலர்களுடன் பேச்சு

(கொழும்பு)

நட்டத்தை தவிர்ப்பது குறித்து அமைச்சு செயலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக பொது முயற்சியாண்மை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, திறைசேரியின் செயலாளர் பீ.பி ஜயசுந்தர உள்ளிட்ட சகல அமைச்சு செயலாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக கோப்பின் தலைவர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சுகளின் செயலாளர்கள் அழைக்கப்பட்டு அவர்களுடன் கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அரசாங்க நிறுவனங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்தவும் நட்டத்தையும் தவிர்க்கவும் இவ்வாறான சந்திப்புகள் வழியமைக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அரச நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள நட்டம் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் கோப் மேற்கொண்டுள்ள பரிந்துரைகள் பின்பற்றப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்கள் தொடர்பான கோப்பின் அறிக்கை அண்மையில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஊடகவியலாளர்களுக்கு விரைவில் வீடுகள்-வீரவன்ச

அரசாங்கத்தின் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் விரைவில் ஊடகவியலாளர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதேச ஊடகவியலாளர்களுக்கும் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன என்று வீடமைப்பு மற்றும் நிர் மாணம் மற்றும் பொறியியல் பொது வசதிகள் அமைச்சர் விமல்வீரவன்ச தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது, வீடமைப்பு அமைச்சானது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வறிய மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்து வருகின்றது.

அந்த வகையில் 2012 ஆம் ஆண்டில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதன் ஒரு பகுதியாக ஊடகவியலாளர்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. இது தொடர்பில் முறையாக அறிவிக்கப்படும்.

இதேவேளை, பிரதேச ஊடகவியலாளர்களுக்கும் வீடுகளை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். பிரதேச மட்டத்தில் இதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசத்துக்கு மகுடம் கண்காட்சியுடன் ஒருங்கிணைந்ததாக அநுராதபுரம் மாவட்டத்தில் பிரதேச ஊடகவியலாளர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

(அ-2)

# புலிப் பாடசாலைகளால் ஆபத்து நேரிடலாம்

## அரசாங்கம் தெரிவிப்பு

ஐரோப்பாவில் இயங்கி வரும் தமிழீழ விடுதலைப் புலி பாடசாலைகளினால் ஆபத்து ஏற்படக் கூடுமென இலங்கை அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐரோப்பா முழுவதிலும் சுமார் 350 விடுதலைப் புலி பாடசாலைகள் இயங்கி வருவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இந்தப்பாடசாலைகளில் தமிழீழ விடுதலைப் புலிக் கொள்கைகள் பிரசாரம் செய்யப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

புலிப் பாடசாலைகளில் சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயின்று வருவதாகவும் ஜேர்மன், சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் நெதர்லாந்து மற்றும் டென்மார்க் போன்ற நாடுகளில் அதிகளவில் இவ்வாறான பாடசா லைகள் இயங்கி வருகின்றன என குறிப்பிடப்படுகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கைகளை பரப்புவதற்கு மட்டுமன்றி பணத்தை சம்பாதிக்கும் இந்த பாடசாலைகளை சில புலி ஆதரவு அமைப்புக்கள் ஐரோப்பாவில் பயன்படுத்திக் கொண்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு குற்றம் சுமத்தியுள்ளது.

சில பாடசாலைகளில் யுத்தப் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மாணவர்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளம் தமிழர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தொடர்புகளை பறைசாற்றும் வகையில் பல்வேறு ஆவணங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

பாதாள உலகக் கோஷ்டி செயற்பாடுகள், ஆயுதக் கடத்தல், போதைப் பொருள் கடத்தல், சட்டவிரோத ஆட்கடத்தல் போன்ற வழிகளில் ஐரோப்பாவில் தமிழ்பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளதாகவும் எதிர்காலத்தில் பாரிய ஆபத்துக்களை சந்திக்க நேரிடலாம் எனவும் பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ-2)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
மருத்துவ பீடம்

மருத்துவ பீடத்திற்கு தங்கள் புகழுடலை தானம் செய்தல்

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட உடற்கூற்றியல் துறையில் செயன்முறைக் கற்றல்களுக்கு தேவையான மனித உடல்கள் போதியளவு இன்மையால் செயன்முறைக் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

எனவே மருத்துவ மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தவும் திறன்மிக்க கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளவும் சமூகப் பற்றாளர்களிடம் உதவியை மருத்துவபீடம் கோரி நிற்கின்றது.

இவ்வகையில் தங்கள் மறைவின் பின்னர் தமது புகழுடம்பை தானம் செய்யும் உயர்ந்த நற்பணியில் ஈடுபட விரும்புவோர் மருத்துவ பீடத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:-021 222 2073

பதிவாளர்
08.12.2011

(சி-5134)


# காதலால் ஏற்பட்ட கசப்புணர்வு துப்பாக்கிச் சூட்டில் முடிபடைந்தது

## நால்வர் உயிரிழப்பு

மொனராகல, ஹம்பேகமுவ. கொட்டவெஹெர மங்கட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

பிரதேச வீடொன்றினுள் நேற்று முன்தினம் நுழைந்த ஒருவர் அங்கிருந்த தாய். தந்தை மற்றும் இரண்டு மகள்மார் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தியுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் தாய், தந்தை இருவரும் அவர்களின் மூத்த மகளும் உயிரிழந்துள்ளதுடன் பலத்த காயங்களுக்கு உள்ளான மகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிய பிரயோகம் நடத்திய நபர் பின்னர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

காதல் தொடர்பு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் 60 முதல் 65 வயதுக்குட்பட்ட தம்பதியரும் 20 வயதான அவர்களின் மகளுமே உயிரிழந்துள்ளனர்.

(அ-2)


SILVER SHIELD

நத்தார்- புதுவருடத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு
மாபெரும் விலைக் கழிவு

கடந்த 30 ஆண்டுகளாக யாழ். நகர் மக்களின் தரச்சிறப்புமிக்க காலுறைகள்(SOCKS)
SILVER SHIELD SOCKS

பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், சிறியோர் முதல் பெரியோர்
வரை சகல தரத்திலும், சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள

பாடசாலைகளுக்கும்,
மொத்த வியாபாரிகளுக்கும்
மேலதிக கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீ முருகன்
303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5392

(சி-5130)

# பொலிஸ் ஆளணிப் பற்றாக்குறையால் பூரண பாதுகாப்பு வழங்க முடியவில்லை!

## யாழ்.வணிகர் கழகத்தினை உதவ கோரும் பொலிஸார்

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் சகலபகுதிகளுக்கும் சம நேரத்தில் பாதுகாப்பை வழங்க முடியவில்லை என யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.பொலிஸ் நிலைய அதிகாரிகளுடன் யாழ்.நகரில் பாதுகாப்பு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.வணிகர் கழகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் அண்மைக்காலங்களில் நடைபெறும் கொள்ளைச் சம்பவங்களினை எவ்வாறு கையாள்வது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் கருத்து தெரிவிக்கையில், இக்கட்டான நிலையில் யாழ்ப்பாணத்தில் கொள்ளைச் சம்பவங்கள் சில இடம் பெறுகின்றன.குறிப்பாக யாழ். நகரை அண்டிய இடங்களிலேயே இவ்வாறான சம்பவங்கள் அதிகம் இடம்பெறுகின்றன.

இதனை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கு எமக்கு ஆளணி பற்றாக்குறை முக்கியமான காரணியாக உள்ளது.

யாழ்.நகரில் பல பிரதான வீதிகள் உள்ளன. எமது ஆளணிப்பற்றாக்குறையினால் நாம் இதனை முழுமையாக பாதுகாக்க முடியவில்லை.இதனால் நீங்களும் எங்களோடு சேர்ந்து செயலாற்ற வேண்டும்.வணிகர் கழகத்தினால் தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட சில எண்ணிக்கை பாதுகாப்பு ஊழியர்களுக்கு பொலிஸாரினால் பயிற்சிகள் வழங்கப்பட்டு விசேட அடையாளஅட்டை, சீருடை என்பன வழங்கப்பட்டு அவர்களும் எங்களோடு கடமையில் ஈடுட்டால் நகரின் பாதுகாப்பை முழுமையாக உறுதி செய்யமுடியும். குறிப்பாக யாழ்.நகரிலுள்ள கே.கே.எஸ் வீதி, கஸ்தூரியார் வீதி,கிராண்ட்பசார், ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய இடங்களில் பொலிஸாருடன் இணைந்து இப்பாதுகாப்பு ஊழியர்களும் கடமையாற்றுவர்.இவர்களுக்கான சம்பளத்தினை யாழ்.நகரிலுள்ள வணிகர் கழகம் வழங்க முன்வர வேண்டும் என யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா, பொலிஸ் அதிகாரி அபயசிங்க பண்டாரவும் வணிகர் கழக்ப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (எ-4)

## நாய்கள் நுழைவதை தடுக்கும் திட்டம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக மார்க்கத்தினுள் நாய்கள் நுழைவதை தடுப்பதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கென வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நாய் மோதி குறித்த வீதியில் விபத்தொன்று பதிவாகியிருப்பதாக ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

(அ-2)

## திருமலையில் மர்மமனிதன் அட்டகாசம்; ஆசிரியர் மீது ஊசி ஏற்றி விட்டு ஓட்டம்

(கொழும்பு)

திருகோணமலையில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையினால் அங்கு மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவி வருகின்றது.

கடந்த சில நாட்களாக பாடசாலை ஆசிரியைகள், மாணவிகள் சிலர் மர்ம ஊசி மனிதர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை தில்லை நகரில் வசித்து வரும் முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் நேற்று முன்தினம்'காலை 10 மணியளவில் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போது மோட்டார்சைக்கிள் ஒன்றில் வந்த மர்ம நபர் ஒருவர் ஆசிரியரின் பின்புறத்தில் ஊசியால் குத்தி விட்டு ஓடி மறைந்துள்ளார்.

குறித்த முன்பள்ளி ஆசிரியை தனது வீட்டிலிருந்து பிரதான வீதியான உட்துறைமுக வீதியில் நடந்த சென்று கொண்டிருந்த சமயமே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியை பெற்றோரின் உதவியுடன் திருகோணமலை வைத்தியசாலைக்கு அழைத்து செல்வப்பட்டு அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். முன்பள்ளி ஆசிரியையின் பின்புறத்திலிருந்து வளைந்த நிலையில் ஊசி மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

மர்ம நபரின் ஊசி தாக்குதலுக்கு இலக்கான முன்பள்ளி ஆசிரியையும் வைத்தியசாலையில் வைத்து தெரிவிக்கையில் குறிப்பிட்ட ஊசி ஏற்றப்பட்ட இடம் விறைத்துக் கொண்டிருப்பதாகவும் எரிவு காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

தனது உடலிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட ஊசியை வைத்தியர்கள் பரிசோதனைக்கு உட்படுத்த வில்லையென்றும் மேலிடத்து அனுமதியில்லாது குறித்தஊசியைபரிசோதனை செய்ய முடியாது என பொறுப்பான வைத்தியர்கள் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் மர்ம மனிதர்களின் செயற்பாட்டினால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பெரும் பதற்றம் நிலவி வந்தது. தற்போது மர்ம ஊசி மனிதர்களின் செயற் பாட்டினால் திருகோணமலை பகுதியில் மக் கள் மத்தியில் பதற்றம் நிலவுகின்றது. இதனால் பாடசாலைக்கு செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியிலும் ஒருவித அச்சஉணர்வு தோன்றியுள்ளது. (அ-2)

## மெனிக்பாம் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டில்

### ஜே.வி.பி குற்றச்சாட்டு

மெனிக்பாம் முகாம் இன்னமும் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருவதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

அவசரகால சட்டம் நீக்கப்பட்டு சில மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் மெனிக்பாம் முகாம் பாதுகாப்பு அமைச்சினால் கட்டுப்படுத்தப்படுகின்றது என ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அஜித்குமார தெரிவித்துள்ளார்.

மேற்படி முகாமில் தங்கியுள்ள இடம்பெயர் மக்களை சந்திப்பதற்கு பாதுகாப்பு தரப்பினர் அனுமதி மறுத்ததாக குற்றம் சுமத்தியுள்ளார்.

முகாமுக்கு விஜயம் செய்வது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சிடம் ஏற்கனவே அனுமதி பெற்றுக் கொண்ட போதிலும் முகாமில் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உட்பிரவேசிக்க அனு மதிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இம்முகாமுக்கு விஜயம் செய்ய வேண்டு மாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

வடமாகாண இடம்பெயர் முகாம்களை இராணுவத்தினர் கட்டுப்படுத்துவது நியாயமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார் .வடக்கு கிழக்கிற்கு விஜயம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தடைகள் ஏற்படுத்தக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தடைகள் ஏற்படுத்துவதன்மூலம் பிரதேசங்களில் இயல்பு நிலைமை ஏற்படுத்தப்படவில்லையோ என்ற சந்தேகம் ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.அஜித் குமார ஜே.வி.பி.கிளர்ச்சி குழுவில் அங்கம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தேவை ஏற்படின் பொலிஸார் ஆயுதங்களை பயன்படுத்தலாம்

### பொலிஸ் ஊடகப்பேச்சாளர்

(கொழும்பு)

கடமையின் நிமித்தம் தேவை ஏற்படின் பொலிஸார் ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு எதுவித தடையும் இல்லை என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளாார்

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நல்லுறவை மேம்படுத்தும் நோக்கிலேயே ஆயுதங்களை தவிர்த்து வருவதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

எனினும் இந்தச் சந்தர்ப்பத்தினை சில சமூக விரோத செயற்பாட்டாளர்கள் உட்பட பொதுமக்களும் தவறாக பயன்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறானதொரு நிலைமையில் பொது மக்களுடனான உறவை ஸ்தீரப்படுத்துவதற்கும் அதனை நிலையாக பேணுவதற்கும் கடமையின் போது ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு பொலிஸாருக்குத் தடையில்லை என பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

(அ-2)

## நாற்பதாயிரம் பட்டதாரிகள் வேலைக்காக காத்திருக்கின்றனர்

### சபையில் தயாசிறி எம்.பி

பாராளுமன்ற விவாதத்தில் இன்றைய தினம் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் திட்டம் எத்தகைய நிலையில் காணப்படுகின்றது என ஆளுங்கட்சியினரிடம் வினவியுள்ளனர்.

கடந்த 2007 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான வரவு செலவுத் திட்டங்கள்மூலம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருப்பதாக பாராளுமனற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

இதுவரை ஒரு பட்டதாரிக்கேனும் தொழில் வழங்கப்படவில்லை எனவும் சுமார் 40 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் நாட்டில் இருப்பதாகவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பொருளாதார பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தபோது நாட்டிலிருந்த 46 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு இந்த அரசாங்கமே நியமனங்களை வழங்கியதாக கூறினார்.

அதேபோன்று நாட்டிலுள்ள ஏனைய பட்டதாரிகளின் தொழில் பிரச்சினைகளுக்கும் அரசாங்கம் தீர்வு வழங்கும் என பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் விவாதத்தில் கலந்து கொண்ட ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க பசும்பால் உற்பத்தித்துறையின் முன்னேற்றத்திற்காக அரசாங்கத்திடம் உரிய வேலைத்திட்டமொன்று இல்லை எனத் தெரிவித்தார். (அ-2)

## சட்டவிரோதமான முறையில் உண்டியல் பணமாற்று சேவை

### திவயின தகவல்

கொழும்பின் சில வீதிகளில் தொடர்ந்தும் உண்டியல் எனப்படும் சட்டவிரோத வெளிநாட்டு பணப்பரிமாற்று வியாபாரம் நடைபெற்று வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜம்பாட்டா வீதி,செட்டியார் தெரு, ரெக்லமேஷன் வீதி உள்ளிட்ட சில பகுதிகளில் தொடர்ந்தும் உண்டியல் வர்த்தகம் நடைபெற்று வருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை பேணும் புலம்பெயர் தமிழர்கள் உண்டியல் முறைமையை பயன்படுத்தி இலங்கைக்கு பணம் அனுப்பி வைக்கின்றனர் என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இதன்மூலம் சுவிசர்லாந்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற பகுதிகளில் இருந்து வடக்கின் சில பிரதேசங்களுக்கு பணம் அனுப்பிவைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உண்டியல் பணப்பரிமாற்று நடவடிக்கைகளினால் வங்கிகளுக்கு கிடைக்க வேண்டிய பெருந்தொகைப் பணம் இழக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுகிறது.

இந்த நிலையில் தடைகளை மீறி சிலர் தொடர்ச்சியாக உண்டியல் பணப்பரிமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

(அ-2)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 21-12-2011 முதல் 16-12-2014 வரை




**(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)**

**பஞ்சம ஸ்தானத்தில் சனி! பணவரவு இனி!!**

***சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தங்களது இயல்புகளை மாற்றிக் கொள்ளும் மிதுன இராசி, நேயர்களே!***

உங்கள் இராசிநாதன் புதன் என்பதால் அனுபவ ஞானம் அதிகம் பெற்றவர்களாக விளங்குவீர்கள். எவரிடமும் எளிதாக பழகிவிடுவீர்கள். மனதில் திடீர் திடீரென நட்பு பகையாகும். பகை நட்பாகும். பலதரப்பட்ட நண்பர்கள் உங்களை நாடி வருவார்கள்.

குடும்ப பொறுப்புக்களை அதிகம் கவனிக்காமல் கூட இருப்பவர்களுக்காகவே பாடுபடும் குணம் உங்களுக்கு உண்டு. உயரதிகாரிகள் முதல் உடன்பிறப்புக்கள் வரை உங்கள் வலையில் விழ காரணமாக இருப்பது மற்றவர்களின் இரகசியங்கள் எல்லாம் உங்களுக்கு தெரிவதால்தான்.

படிப்பு, தொழில் ஆகியவற்றை தேர்ந்தெடுக்கும் பொழுதும் வாழ்க்கைத் துணையை நீங்கள் தேர்ந்தெடுக்கும் பொழுதும் இராசிநாதன் புதனின் சார பலமறிந்து செயற்படுவது தான் நல்லது. எளிய வழியில் பணம் சம்பாதிப்பது எப்படி என்ற இரகசியத்தை அறிந்து வைத்திருக்கும் நீங்கள் புகழ் ஏணியில் உச்சிக்குச் செல்லவும் பொன்னான பதவி வாய்ப்புகளைப். பெறவும் பொருளாதாரத்தில் முதன்மை நிலையை அடையவும் நவாம்சத்தில் புதன் இருக்கும் நிலையறிந்து அதைப் பார்க்கும் கிரகத்தையும் அதோடு இணைந்த கிரகத்தையும் சேர்த்து ஆராய்ந்து அந்த கிரகத்திற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொள்வது உத்தமம்.

இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சி தானா? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**மறக்க முடியாத மார்கழி ஐந்து!**

மார்கழி 5 ஆம் திகதி முதல் துலாம் இராசியில் சனி சஞ்சரிக்கப்போகிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 2,7,11 ஆகிய இடங்களைப் பார்க்கப்போகிறார். இதன் விளைவாக வாக்கு, தனம், குடும்பம், களத்திரம், புதல்வர்கள், பொருளாதாரம், உடன்பிறப்பு, இளைய சகோதரம், விலகிச் சென்ற சொந்தங்கள், தொழிலில் வரும் இலாபம், இடமாற்றங்கள், எதிர்பாராத பயணங்கள் ஆகியவற்றில் எல்லாம் நல்ல மாற்றங்களையும் திடீர் திருப்பங்களையும் கொடுக்கப்போகிறது.

மந்தன் என்றாலே மந்த கதியில் இயங்குபவன் என்று பொருள். அவன் உங்கள் இராசியைப் பொறுத்த வரை 8,9 க்கு அதிபதியாக விளங்குகிறார். இப்பொழுது உச்ச வீட்டில் அடியெடுத்து வைக்கிறார். 8 இக்கு அதிபதி உச்சம் பெற்றால் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும் என்பார்கள்.

அதேநேரத்தில் ஒன்பதுக்கு அதிபதியாகவும் விளங்கி உச்சம் பெறுவதால் பொன், பொருட்கள் வந்து குவியப்போகிறது. புகழும் வந்து சேரப்போகிறது. இரண்டு விதமான ஆதிபத்தியங்களை இந்த சனி பெற்றிருப்பதால் எதையும் நீங்கள் யோசித்தும் இறைவனை பூஜித்துத்தும் செய்வது நல்லது. சனியின் பார்வை சஞ்சலம் தரும் பார்வை என்பார்கள். பணியில் தொய்வு ஏற்படாமல் இருக்கவும் பணப்புழக்கம் அதிகரிக்கவும் உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கவும் உள்ளத்தில் நினைத்த காரியங்கள் நல்லவிதமாக நடப்பதற்கும் சனிப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே நீங்கள் சனீஸ்வரரை சந்திப்பது நல்லது. ஈஸ்வரர், அம்பிகை மற்றும் சனீஸ்வர பகவானையும் வழிபட்டு வாருங்கள். வாய்ப்புக்கள் வாயில் கதவைத் தட்டும்.

**மந்தன் பார்வையால் ஏற்படும் மகத்தான பலன்கள்!**

உங்கள் இராசிக்கு பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை 2,7,11 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. அதிலும் 8,9 க்கு அதிபதியாக சனி விளங்குகின்றார். 9 க்கு அதிபதியான சனி பகவான் 2,11 ஆகிய இடங்களைப் பார்க்கும் பொழுது வள்ளலாக மாறி அள்ளிக் கொடுக்கப்போகிறார்.

குறிப்பாக வாக்கு, தனம், குடும்பம் ஆகிய ஸ்தானங்களைப் பார்ப்பதால் அதாவது இரண்டாமிடத்தை சனி பார்ப்பதால் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளுக்கு வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்திலுள்ள குழப்பங்கள் அகல முக்கிய புள்ளிகள் முன்வந்து உதவுவர்.

சப்தம ஸ்தானத்தை சனி பார்ப்பதால் வீட்டில் கெட்டிமேளம் கேட்க வாய்ப்புக்கள் உருவாகப் போகின்றது. சனி பார்ப்பதால் எப்படி கல்யாணம் நடக்கும்? என்று நீங்கள் நினைக்கலாம். அஷ்டமாதிபதி சனி சப்தம ஸ்தானத்தைப் பார்க்கும் பொழுது குடும்பத்தில் சுபச் செலவுகள் ஏற்பட வேண்டும் அல்லவா?

இலாப ஸ்தானத்தைப் பார்க்கும் சனியால்

# எவரிடமும் எளிதாக பழகும் குணம் கொண்டவர்கள்

இலாபம் பெருகும். உதிரி வருமானங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு தடைப்பட்ட சலுகைகள் தானாகவே கிடைக்கும். கடல் பயண வாய்ப்புக்கள் கைகூடலாம்.

**குருப் பெயர்ச்சிக்காலம்!**

சுமார் 2 அரை ஆண்டுகள் துலாம் இராசியில் சஞ்சரிக்க வேண்டிய சனி பகவான் கூடுதலாகவே சில மாதங்கள் அந்த இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். இக்காலத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெற இருகின்றது. 17.05.2012 இல் இடப இராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 28.05.2013 இல் மிதுன இராசியில் குரு உலா வரப்போகிறார். 13.06.2014 இல் கடகஇராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார்.

இடபத்தில் குரு சஞ்சாரம் செய்யும் பொழுது அதன் பார்வை பலத்தால் 4,6,8 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. எனவே குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். வீடு வாங்கும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டு புதிய வாகனங்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது ஜென்ம குருவாக வருகிறார். எனவே சிறுசிறு விரயங்கள் ஏற்படலாம் அதன் பார்வை பலத்தால் 5,7,9 ஆகிய இடங்கள் புனிதமடைவதால் பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்குவீர்கள்.

கடக இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவதால் உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கடன் சுமை குறைந்து கவலைகள் தீர புதிய வழி பிறக்கும். இக்காலத்தில் குரு வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் குதூகலம் அதிகரிக்கும்.

**இராகு-கேது பெயர்ச்சிக்காலம்**

02.12.2012 இல் துலாம் இராசியில் இராகுவும் மேட இராசியில் கேதுவும் சஞ்சரிக்க போகிறார்கள். 21.06.2014 இல் கன்னி இராசியில் இராகுவும் மீன இராசியில் கேதுவும் உலா வரப்போகிறார்கள்.

முதல் இராகு-கேது பெயர்ச்சிக்காலத்தில் வெளிநாட்டு யோகம்விரும்பியபடியே அமையலாம். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். பஞ்சம இராகுவும் பதினொன்றாமிடத்து கேதுவும் கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட பிரச்சினைகளை படிப்படியாக தீர்த்து வைக்க வழிகாட்டும். அடுத்த இராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் இடமாற்றம், ஊர் மாற்றம், தொழில்மாற்றங்கள் உருவாகும். வீட்டு பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. உறவினர்களின் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. சர்ப்ப சாந்தியை முறைப்படி செய்வது நல்லது.

**சனியின் வக்ரகாலம் பொற்காலமாக மாற**

துலாம் இராசியில் உச்சம் பெறும் சனி ஐந்து முறை வக்ரமடைந்து வக்ரமடைந்து நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கும் 8,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் வக்ரம் பெறும் போது எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உடல் நலத்திற்காக ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். நண்பர்களை நம்பி ஏமாற்றமடையாதிருக்க விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவதே நல்லது.

தக்கவிதம் அனுசரித்து செல்வதோடு சுய ஜாதகத்தில் தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாட்டையும் மேற்கொள்வது உத்தமம். இல்லத்து பூஜை அறையில் சாப விமோசன படங்கள் வைத்து வழிபடுவதும் நல்லது. காரிய வெற்றி ஏற்படும்.

**சனியின் சஞ்சாரப் பலன்கள்!**

பஞ்சம ஸ்தானம் வரும் சனி பணவரவைப் பெருக்குமா?

இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சனி சஞ்சரித்து அர்த்தாஷ்டமச் சனியாக இருந்து அல்லல்களை அதிகம் கொடுத்திருக்கலாம். இப்பொழுது அந்த நிலை மாறி உச்ச வீட்டில் உலா வரப்போகிறது. எனவே உங்கள் காட்டில் இனி பண மழைதான். உச்ச சனியின் ஆதிக்கமாக இப்பொழுது வருவதால் அச்சமில்லாத வாழ்க்கை உங்களுக்கு அமையும் அல்லவா?

அந்த அடிப்படையில் உச்ச சனி உங்கள் இராசி

**சிவல்புரிசிங்காரம்**

க்கு ஐந்தில் உலா வரும் பொழுது இதுவரை தேக்க நிலையில் இருந்த காரியங்கள் எல்லாம் மளமளவென்று நடைபெறத் தொடங்கும்.

**தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு**

வழிபாடுகளால் வாழ்க்கையில் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள இயலும். அர்த்தாஷ்டமச் சனி விலகும் இந்த நேரத்தில் அருகில் இருக்கும் சிவாலயத்திற்குச் சென்று சனி விலகும் நாளில் விலகும் நேரத்தில் எள் தீபமேற்றி வழிபட்டால் இனி வரும் காலங்கள் இனிய காலங்களாக மாறும்.

சிறப்பு வழிபாடாக சனீஸ்வரபகவானை வழிபட்டால் சொல்லை செயலாக்கி காட்டலாம்.

**காகத்தில் ஏறி நின்று**
**கனிவோடு வரத்தை நல்கி**
**தேகத்தை காக்கும் ஈசா**
**செல்வத்தை வழங்குவாயே!**

என்று சனியின் கவசத்தை பாடி வந்தால் நன்மைகள் பல தேடி வரும். (தொடரும்)

# தியானம்



ஆன்மீகம் 03

## ஆனந்தத்தின் வாசல்

யார் அதை வேண்டாம் என சொல்லப்போகிறார்கள். எல்லோருக்கும் அதுதான் தேவை. ஆனால், பலருக்கும் இதைப்பற்றி தெரியவில்லை என்பதுதான் விடயம். எனவே நமது வேலை, தியானம் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதுதான். இது ஏதோ மலைக் குகைகளுக்கு செல்வதைப் பற்றியல்ல; இமயமலைக்குச் சென்று அமர்வதைப் பற்றியல்ல. இது, துன்பங்களில் இருந்து முற்றிலுமாய் விடுபட்டு வாழக் கற்றுக் கொள்வது. நீங்கள் விரும்பும் விதமாக வாழ்வோடு விளையாட முடியும். ஆனால், வாழ்க்கை உங்கள் மீது ஒருசிறு தழும்பைக்கூட ஏற்படுத்தாது.

தற்போது வாழ்வின் போக்கில் மக்கள் காயம்பட்டுக் கிடக்கிறார்கள். அப்படி என்னதான் செய்துவிட்டார்கள்? தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றவும், ஒருநாள் இறந்து போகவும் எவ்வளவு வலியையும் வேதனையையும் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்? ஏனென்றால், இன்னமும் உயிர் தன்மையோடு எப்படி தொடர்பு கொள்வது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். ஒரு மனிதன் தியான நிலையில் இருந்தால் அந்த மனிதனுக்குத் துன்பம் என்பதே இருக்காது. தியான நிலை என்றால் துன்பத்திலிருந்து முற்றிலும் விடுபட்ட நிலை. வாழ்க்கையின் போக்குகள் அவரைத் தொடாமல் அவரது வாழ்வில் அவர் விரும்பியதைச் செய்யலாம்.

கேள்வி: தியானம் செய்யும் போது ஏன் ஒரு சிலர் அழுகிறார்கள்?

சத்குரு: தியானத்தில் இருக்கும் போது சிலருக்கு கண்ணீர் அவர்களின் கன்னங்களில் வழிவதைப் பார்த்திருப்பீர்கள். துரதிஸ்டவசமாக சமூகத்தில் கண்ணீர் என்றாலே வேதனை, துன்பம் என்றே அர்த்தப்படுத்திக் கொள்கிறார்கள். உண்மையில் கண்ணீருக்கும் துன்பத்திற்கும் எந்த தொடர்புமில்லை. எந்த ஒரு அனுபவமும் உங்களுக்குள் ஆழமாக ஆக்கிரமிக்கும் போது கண்ணீர் வரும். நீங்கள் மிகமிக மகிழ்சியாக இருந்தாலும் கண்ணீர் வரும். தீவிர அன்பாய் இருந்தாலும் கண்ணீர் வரும். உங்கள் அமைதி ஆழமாக இருக்கும் போது கண்ணீர் வரும். அன்பினாலும் அமைதியாலும் மகிழ்ச்சியாலும் பெருக்கெடுக்கும் கண்ணீர், உங்கள் கன்னங்களைக் கழுவா விட்டால் நீங்கள் இன்னும் வாழ்க்கையை ருசிக்கவில்லை என்றே சொல்வேன். யோகம், தியானம் இவையெல்லாம் உங்களை உள்நிலையில் ஆழமான அனுபவத்தை ஏற்படுத்தி உங்களிலிருந்து பரவசக் கண்ணீரை பெருக்கெடுக்கச் செய்யத்தான்.

கேள்வி: ஆனால், தங்களின் முன்னிலையில் இருக்கும்போது சிலருக்கு அப்படி நிகழ்கிறதே...

சத்குரு: நான் என்ன வழங்குகிறேனோ அது என் வார்த்தைகளில் இல்லை. என்னிடம் உங்களுக்கு வழங்குவதற்கு எந்த போதனைகளும் இல்லை; எந்த செய்திகளும் இல்லை; என் இருப்பின் தன்மையில் உங்களை முழுவதுமாக மூழ்கச் செய்ய அனுமதித்தால் உங்களுக்கு உள்ளேயே இருக்கும் ஆனந்தத்தால் நீங்கள் ஆக்கிரமிக்கப்படுவீர்கள். அதைத்தான் நான் உங்களுக்கு வழங்குகிறேன்.

கேள்வி: மன அழுத்தத்திற்கு என்ன காரணம்?

சத்குரு: மக்கள் இன்று பல விதங்களிலும் மன அழுத்தத்திற்கும் பதட்டத்திற்கும் ஆளாகிறார்கள். பழங்காலத்தில் அறியாமை என்ற பெயரில் அழைத்ததை இன்று அழுத்தம், பதட்டம் என்ற புதிய பெயர்களில் அழைக்கிறோம். மன அழுத்தத்தையும் பதட்டத்தையும் நிர்வகிப்பதைப் பற்றி நிறையப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எதற்காக உங்கள் மன அழுத்தத்தை நீங்கள் நிர்வகிக்க வேண்டும்? உங்கள் சொத்துக்களை நீங்கள் நிர்வகிக்க வேண்டும், உங்கள் குடும்பத்தை நிர்வகிக்க வேண்டும். உங்கள் தொழிலை நீங்கள் நிர்வகிக்க வேண்டும் என்பதெல்லாம் எனக்குப் புரிகிறது. ஆனால், எதற்காக உங்கள் மன அழுத்தத்தை நிர்வகிக்க விரும்புகிறீர்கள்? மன அழுத்தம் நீங்கள் செய்யும் செயலால் நேர்வதில்லை. உங்களையே சரியாக நிர்வகிக்கும் திறமை உங்களுக்கு இல்லாததால் நேர்வது. உங்கள் உடல், மனம், உணர்ச்சிகள், சக்திநிலை இவற்றை எப்படி வைத்துக் கொள்ளவேண்டுமோ அப்படி வைத்துக் கொள்ளும் திறன் இல்லாததால்தான் மன அழுத்தமும் பதட்டமும் வருகின்றன. உங்களை நல்வாழ்வில் தக்கவைத்துக் கொள்ளும் திறனோ, மன அழுத்தத்திற்கு காரணமான சக்திநிலைகளை நிர்வகிக்கும் திறனோ உங்களிடம் இல்லை.

தியானம் என்பது இதற்கான நிவாரணம் மட்டுமல்ல; உங்களுக்குள் மனஅழுத்தம் போன்ற விடயங்களே இல்லாத பரிமாணத்திற்குள் உங்களை எடுத்துச் செல்லும் மகத்தான வாய்ப்பு. (தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

---

# மலையக முஸ்லிம் கிராமங்களின் மண் மணக்கும் பாடல்கள்

05



இவர்பாடு பரவாயில்லை. கண்டியில் ஒன்று. மட்டக்களப்பில் ஒன்று. ஆனால், இன்னொருவர் இரண்டு தாரங்களுடன் ஒரே வீட்டில் வாழ்கிறார். இரவு நேரம் நிலவொளியில் இளையவள் பாயிழைக்கிறாள். (கண்டி இராசதானியில் தும்பறை பள்ளத்தாக்கு பாயிழைத்துப் பெயர் போனது. எமது களமும் பாத்த தும்பறை பிரதேசத்திலேயே அமைந்துள்ளது.) அவனின் முதல் மனைவி, இளையவள் வெளியே இருக்க வீட்டுக்கதவைத் தாழிடுகிறாள். வேதனைப்படும் இளையவள் தனக்கிழைத்த அநீதியை இறைவனிடம் முறையிடுகிறாள் இவ்வாறு.

பால் போல நிலவெறிக்க  
பசுங்கிளியாள் பாயிழைக்க  
தாத்தா தள்ளி கதவடைக்க  
உங்கள் அல்லாதான்  
கேளானோ?

இதே பாடலின் முதல் வரியுடனான ஒரு பாமரப்பாடல் மன்னார் மாவட்டத்தில் இவ்வாறு நிலவுகிறது.

பால் போல நிலவெறிக்க  
பார்த்ததிலே சோறுதின்ன-ஒரு  
பாலன் விளையாட  
பாக்கியந் தா ஆண்டவனே!

இப்பாடல் குழந்தையில்லாத ஒரு தாயின் ஏக்கக் குரலாக ஒலிக்கிறதல்லவா?

நாட்டார் பாடல்களில் கதைப் பாடல்களுக்கு தனியிடம் உள்ளது. அந்த வகையில் ஈழத்தில் ஆக்காட்டிப்பாடல் அல்லது ஆக்காண்டிப்பாடல் பல பிரதேசங்களிலும் புகழ் பெற்றது. அது எமது கிராமத்தில் காணப்பட்டது. அதாவது ஒரு ஆக்காட்டிப் பறவை தனது மூன்று குஞ்சுகளுக்கும் இரைதேடிச் செல்லும் போது ஒரு கண்ணியில் அகப்பட்ட சோகக் கதையைக் கூறுவதே அப்பாடலாகும். அப்பாடலின் இறுதி வரிகள் அந்த அப்பாவிப்பறவையின் கண்ணீரின் அளவை இவ்வாறு கோடிட்டுக் காட்டுகிறது.

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

நானழுத கண்ணீருல...  
ஆன முழுகாட்டி, குதுர முழுகாட்டி  
ஆறுகொளம் நெறஞ்சி  
ஏழு கடலும்தான் நெறஞ்சி...

என்று தொடரும் அப்பாடல். அதே ஆக்காட்டிப்பாடல் வடபுலத்தில் பாடப்படும் போது கண்ணீரின் அளவை இவ்வாறு புலப்படுத்துகிறது.

நானழுத கண்ணீரும்- என்  
குஞ்சழுத கண்ணீரும்  
வாய்கால் நிரம்பி  
வழிப்போக்கர் கால் கழுவி  
இஞ்சிக்குப் பாய்ந்திடத்தே  
இலாமிச்சை வேரூன்றி  
மஞ்சளுக்குப் பாய்ந்திடத்தே  
மாதாழை வேரூன்றி  
வாழைக்குப் பாய்ந்திடத்தே  
வற்றினது காணீரே.

இவ்வாறு ஈழத்தின் இதர பிரதேசங்களுடனும் தென்னிந்திய கிராமங்களுடனும் உறவுப்பாடல்களால் மலையக முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள் அமைவதற்கு அக்காலத்தில் இடப்பெற்ற புலப்பெயர்வுகள் காரணமாகியிருக்கலாம். என்றாலும், மலையக முஸ்லிம்கள் எனும் இந்த இனத்துவக் குழுக்கள் வாழும் கிராமப் பெயர்களைக் கொண்டமைந்த ஒரு பாடலை இறுதியாகப் பார்ப்போம்.

மானிருக்கும் மடுவக்கல- நல்ல  
மயிலிருக்கும் பட்டியாமம்  
தேனிருக்கும் தலவின்ன- நீங்க  
தேடி வந்தாலாகாதோ!

இங்கு மடுவக்கல என்பது பன்விலை பிரதேசத்தின் மடுகல்கல பகுதியாகும். அங்கு உளுகங்கை, ரோட்டுக்கடை, அரத்தன என்பன முஸ்லிம் கிராமங்களாகும். பட்டியாமம் என்பது தெல்தோட்டை பிரதேசத்தின் பட்டியகம எனும் முஸ்லிம் கிராமமாகும். இப் பிரதேசத்தில் சுமார் பத்து முஸ்லிம் கிராமங்கள் இருக்கின்றன. தேனிருக்கும் தலவின்ன என்பது அக்கால கட்டத்தில் எமது மண்ணில் விளைந்த கரும்பையும், கித்துள் பாணியையும் குறிப்பதாக அமைந்திருக்கலாம். அத்தோடு,

தலவின்ன கரும்பு  
இனிகல பிரம்பு  
உகுரஸ்பிட்டி தும்பு

என்பது எமது பிரதேசத்தில்



தலவின்னை சியார்

சிலாகிக்கப்படும் சொற்சித்திரமாகும். இம் மூன்று உறவு முறைக் கிராமங்களினதும் அக்கால கைத்தொழில் துறையை இது நன்கு புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. (முற்றும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# உலகை ஆளும் அணுகுண்டு: விஞ்ஞான ரீதியான ஒரு பார்வை


நாம் எல்லோரும் இன்று சமாதானத்திற்காகவும் வாழ்வியலை மேம்படுத்துவதற்காகவும் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், வல்லாதிக்க நாடுகளோ தமது வல்லாதிக்க இருப்பை மேம்படுத்த அணு சக்தி, அணுகுண்டு எனும் விடயத்திற்காக முட்டி மோதுகின்றன.

2 ஆம் உலக மகா யுத்தத்தின் பின்னரே நாம் அணுகுண்டு பற்றி அறிந்திருந்த போதிலும் புராண இதிகாசங்கள் வாயிலாக எமது முன்னோர்கள் அணுகுண்டினைப் பயன்படுத்தியுள்ளனர் என அறியமுடிகின்றது.

திரைப்படங்கள் மூலம் நாம் பார்த்துத் தெரிந்த டைனோசர் எனும் இனமும் கூட அணுகுண்டின் தாக்கத்தினால் அழிந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னரான காலப் பகுதியில் ஐ.நா. எனும் அமைப்பின் தோற்றத்திற்கும் கூட அணுகுண்டுகளின் தாக்கத்தினால் ஏற்பட்ட அழிவுகளே அடிப்படையாக இருந்துள்ளது.

இன்றைய வல்லாதிக்க நாடுகள் எவை என்பது அணு ஆயுதங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப் படுகின்றன. அணுகுண்டு வைத்திருக்கும் நாடுகளே பெரிய நாடுகளாகவும் ஏனைய நாடுகளை அச்சுறுத்தக்கூடியனவாகவும் காணப்படுகின்றன.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஜப்பான், அமெரிக்காவின் பேர்ள் துறைமுகத்தை தாக்கியதற்கு பதிலடியாக அமெரிக்கா மிகப் பெரிய ஒரு மிலேச்சத்தனமான தாக்குதலை ஜப்பானின் குரோசிமா, நாகஷாகி போன்ற நகரங்களின்மேல் இரண்டு அணுகுண்டுகளைப் போட்டது. அதனால் வந்த விளைவுகளால் இந்த மனிதகுலம் இழந்தமை ஏராளம். கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டும், பலர் அங்கவீனர்களாக உருவாக காரணமாகவும் இருந்தது. அதன் தாக்கம் இன்றுவரை அந்த மண்ணில் காணப்பட்டுக் கொண்டிருக்கின்றது.



படம்-1 மாதிரி அணுகுண்டும் அது வெடிப்பதால் ஏற்படும் தாக்கத்தையும் காணலாம்.

இதைவிட இந்தியாவில் சென்ற நூற்றாண்டில் ஏற்பட்ட அணு உலைக்கசிவால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அண்மையில் கூட ஜப்பானை தாக்கிய சுனாமியால் அணு உலைகளில் பாதிப்புக்கள் வந்தமையால் பல வகையான இடர்களை மக்கள் எதிர்கொண்டதை நாம் அனைவரும் அறிவோம்.

இவ்வாறான கொடிய விளைவுகளை இயற்கைக்கும் எமது வாழ்வியலுக்கும் ஏற்படுத்தும் இந்த அணுகுண்டு தொடர்பாக நாம் அறிந்து கொள்வோம்.

அதாவது அணுகுண்டு என்றால் என்ன? இது மற்றைய ஆயுதங்களில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? இதன் விஞ்ஞான, பௌதீகவியல் தத்துவங்கள் என்ன? அதன் வடிவமைப்பு? அதன் தாக்கமும் விளைவுகளும் எவ்வாறானவை? அணுகுண்டுகள் தயாரிக்கப் படும் தேசங்கள் எவை? அணுகுண்டால் உலக நாடுகளுக்கிடையில் ஏற்படும் போட்டிகளும் அவற்றுக்கான உடன் படிக்கைகளும் போன்ற விடயங்களைக் காண்போம்.

### அணுகுண்டின் தோற்றமும் அதன் வளர்ச்சியும்

அணுகுண்டு தொடர்பான தயாரிப்புக்களும் அதன் ஆராய்ச்சிகளும் கிட்டத்தட்ட 1930 காலப்பகுதிகளில் ஆரம்பமானது. ஆனாலும் முதலாவது அணுகுண்டை அமெரிக்கா, பிரித்தானிய குடியரசு, கனடா போன்ற நாடுகள் இணைந்து 2 ஆம் உலக மகாயுத்த காலப் பகுதியில் தயாரித்தன.

இந்தச் செயற்றிட்டம் மங்கட்டன் செயற்றிட்டம் (man hattan project) என அழைக்கப்பட்டது. சம காலப் பகுதியில் ரஷ்யா,ஜேர்மனி போன்ற நாடுகளும் அணுகுண்டு செயற்றிட்டத்தை செயற்படுத்தின.

இந்த அணு குண்டு தயாரிக்கும் செயற்றிட்டம் பனிப் போரில் ஆரம்பமாகி 2 ஆம் உலக மகா யுத்தகாலப் பகுதியில் விரைவு கண்டது. 2 ஆம் உலக மகா யுத்தத்தின் பிரதான கதாநாயக நாடுகளே அவற்றை உருவாக்கி இருந்தன. ஆனால் இன்று கிட்டத்தட்ட 9 நாடுகள் அணுகுண்டு தயாரிக்கும் செயற்றிட்டத்தில் உள்ளன. (படம்-1)

### பௌதீகவியல் பார்வையில் அணுகுண்டின் வளர்ச்சி


பௌதீகவியலின் படி அணுகுண்டு தயாரிப்பின் போது 2அடிப்படைத் தத்துவங்கள் முதன்மை பெறுகின்றன.

- ✷ கரு பிளவுத் தாக்கம் (Nuclear Fission Reaction)
- ✷ கரு இணைவுத்தாக்கம் (Nuclear Fusion Reaction)

அணுகுண்டின் பிரதான மூலகமாக யுரேனியம் காணப்படுகின்றது. (235 U)

### கரு பிளவுத் தாக்கம் (Nuclear Fission Reaction)

கரு ஆனது பிளவுபட்டு வேறு பாரமில்லாக்கருக்களை உருவாக்கும் அதேவேளை சுயாதீன நியூத்திரன் மற்றும் புரோத்திரன்களையும் குறித்த ஒரு சக்தியையும் வெளிவிடுவது கருப்பிளவு எனப்படும். இந்த கருப்பிளவின் போது பிளக்கப்பட வேண்டிய கரு ஆனது நியூத்திரனால் துண்டாக்கப்பட்டே (கரு நியூத்திரனை உள்ளெடுத்து) பிளக்கப்படுகின்றது.




படம்-2 கருப்பிளவு மூலம் யுரேனியம் காட்டும் தாக்கம்.

இந்தக் கருப்பிளவின் போது மேலும் பல நியூத்திரன்கள் வெளிவிடப்படுகின்றன. எனவே வெளிவிடப்படும் சுயாதீன நியூத்திரன்கள் உடன் அங்கேயுள்ள மேலதிக கருக்கள் மீண்டும் மீண்டும் தாக்கமடைகின்றன. இத்தாக்கம் மீண்டும் மீண்டும் நடைபெறுவதனால் இதனை சங்கிலித் தொடர் தாக்கம் என அழைக்கின்றோம் (Chain Reaction). இச் சங்கிலி தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அணு வெப்பம் ஊட்டும் கருவி (Nuclear Reactor) பயன்படுத்தப்படுகின்றது.

இவற்றை பயன்படுத்துவதன் மூலம் அணுசக்தி ஆலைகள் உருவாக்கப்படுகின்றன. அணு சக்தி மையங்களில் இவை பிரதான இடத்தினைப் பெறுகின்றன. இந்தச் சங்கிலி தாக்கங்களை கட்டுப்படுத்தலே அணுகுண்டில் பயன்படுத்தப்படும் மிக பிரதானமான தொழில்நுட்பம் ஆகும். இதன்மூலம் அணுகுண்டு வெடிக்கச் செய்வதன் மூலம் அங்கே பெருந்தொகையான அணுக்கள் வெளிவிடப்பட்டு தொடர் தாக்கம் நடைபெற தூண்டப்படுகின்றது. இதனால் பெருமளவு சக்தி வெளியிடப்படும். அணுகுண்டில் இந்தக் கருப்பிளவு செயற்பாட்டிற்கு என யுரேனியம் (235 U) என்ற பாரமான மூலகமே பயன்படும். மேலே உள்ள படத்தின் மூலம் அங்கு சங்கிலித்தாக்கம் நடைபெறுவதைப் பார்ப்போம். (படம்-2)


(தொடரும்)

**சு.அரிகரன்**
செய்முறை வழிகாட்டுநர்
பௌதீகவியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 55

**A,B,C,D எனும் உருக்களை மேற்படி மாற்றீடு செய்யும் போது, கனவளவின் மாற்றம் யாது? அளவீடு cm இல் உள்ளன.**

விடைகளை 19.12.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:




**சி. கேதீஸ்வரன்**
(ஆசிரியர்-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A)
நூலகம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செல்வேஸ்வரனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 54 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

பானுஜா சந்திரகாந்தன்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

**புதிர் 54 இற்கான கேள்வியும் விடையும்:**

**கேள்வி:-ஒரு கிராம் நீரை ஒரு பாகை செல்சியஸ்சால் உயர்த்துவதற்கு எவ்வளவு கலோரி வெப்பம் வேண்டும்?**

**விடை:- ஒரு கலோரி**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 55**

| | |
|---|---|
| சரியான விடை | :.................................................. |
| முழுப்பெயர் | :.................................................. |
| முகவரி | :.................................................. |
| | :.................................................. |
| தொ.பே. இல | :.................................................. |
| கையொப்பம் | :.................................................. |

# அமெ.இந்தியாவுடன் நேரடி உறவுகளை பேண மிலிந்த மொறகொடவும் பீரிசும் ஆர்வம் காட்டினர்

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

தற்போதைய வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசும் முன்னாள் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவும் அமெரிக்க ஆதரவாளர்கள் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக கடமையாற்றிய காலத்தில் அமெரிக்காவுடன் நெருங்கிய உறவுகளைப் பேண வேண்டுமென்பதில் மிலிந்தவும் ஜீ.எல்.பீரிசும் கூடுதல் நாட்டம் காட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்சினால் இந்தத் தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா போன்ற காலானித்துவ நாடுகள் மற்றும் பொதுநலவாய நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேண வேண்டுமென ஜீ.எல்.பீரிஸ் விரும்பிய அதேவேளை அமெரிக்காவுடன் உறவுகளைப் பேண வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அதிகளவில் அமெரிக்க விஜயங்களை மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் நேரடி உறவுகளைப் பேண வேண்டும் என்பதில் மிலிந்த மொறகொட கூடுதல் ஆர்வம் காட்டியதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வோஷிங்டன் டி.சி.யில் பிறந்து அமெரிக்க பெண்ணை திருமணம் செய்து கொண்ட மிலிந்த மொறகொடவிற்கு அமெரிக்காவுடனான பந்தம் அதிகமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வழிகளில் அமெரிக்காவிற்கும் மிலிந்த மொறகொடவிற்கும் உறவு காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட சில காலங்களிலேயே அமெரிக்காவுடன் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில் பீரிசும் மொறகொடவும் அதிக அக்கறை காட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ரணிலுக்கான ஆதரவு வீழ்ச்சியடைகிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு காணப்படும் ஆதரவு வீழ்ச்சியடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிளர்ச்சிக்குழுவினர் அதிகளவான பலத்தை கைப்பற்றி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

செயற்குழுவில் வெற்றிடமாக உள்ள பதவிகள் உடனடியாக நிரப்பப்பட வேண்டுமென கிளர்ச்சிக் குழுவினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறு வெற்றிடங்கள் நிரப்பப்படுவதன் மூலம் தமது பலத்தை வலுப்படுத்திக் கொள்ள முடியும் என கிளர்ச்சியாளர்கள் கருதுகின்றனர். (அ-2)

# ஐக்கிய நாடுகள் அமைதிப்படையில் இலங்கைப் படையினர் ஆயிரம்பேர்

## இராணுவப் பேச்சாளர்

இலங்கை படைவீரர்கள் ஆயிரம் பேர் லெபனான் மற்றும் ஹெய்ட்டி ஆகிய நாடுகளில் பணியாற்றும் ஐக்கிய நாடுகள் அமைதிப்படையில் இணையவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் அவர்கள் குறித்த நாடுகளுக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனானுக்கு செல்லும் படைவீரர்கள் ஆயுதங்கள் மற்றும் படை வாகனங்கள் சகிதம் அனுப்பப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையினராக செல்வோருக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரத்து 100 அமெரிக்க டொலர்கள் வரையில் செலுத்தப்படுகின்றன.

இலங்கைப்படையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில் முதன் முறையாக ஐக்கிய நாடுகளின் அமைதிப் படைக்காக இலங்கை படைவீரர்கள் ஹெய்ட்டிக்கு அனுப்பிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புலிகளுடன் தொடர்புகளை, பேணியதாக இருவர் கைதாகினர்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய இரண்டு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றியீட்டிய இரண்டு உறுப்பினர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைப் பிரிவினரால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்டுகிறது.


யுத்தம் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேணிய தொடர்புகளின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்களை மறைத்து வைப்பதற்கும் பயங்கரவாதிகளின் ஏனைய நடவடிக்கைகளுக்கும் குறித்த நபர்கள் ஒத்துழைப்பு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றமொன்றைச் சேர்ந்த ஒருவரும் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்றமொன்றைச் சேர்ந்த ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

# பொன்சேகா விடயத்தில் மேர்வின் நிலை சரியானது



## வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடயத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ள கருத்துக்களில் தவறுகள் இருப்பதாக நான் கருதவில்லை என்று வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை தவிர எந்தவொரு கைதியும் நீதிமன்றிற்கோ அல்லது வைத்தியசாலைக்கோ அழைத்துச் செல்லப்படுகையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது, சரத் பொன்சேகா விடயத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ள கருத்துக்களில் தவறுகள் இருப்பதாக நான் கருதவில்லை. காரணம் சிறைக்கைதிகள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவதை நிறுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அது சரியானதாகும்.

உண்மையில் அவ்வாறுதான் நானும் கருதுகின்றேன். காரணம் வேறு எந்த சிறைக் கைதிகளும் நீதிமன்றத்துக்கோ மற்றும் மருத்துவமனைகளுக்கோ வந்து செல்லும் போது இவ்வாறு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவதில்லை. (அ-2)

# முதலாளித்துவ நாடுகள் தங்களது நோக்கத்தை நிறைவேற்றியுள்ளன

## அதிவேக பாதை குறித்து லால்காந்த

தென்பிராந்திய அதிவேகப்பாதை தொடர்பில் இரகசியங்களை ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவருமான கே.டி.லால்காந்த வெளியிட்டுள்ளார்.

அண்மையில் மாத்தறையில் வைத்து இவற்றை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகளின் முன்னாள் செயலாளர் கோபிஅனான் இந்தப் பாதை அமைப்பு தொடர்பில் 2001 ஆம் ஆண்டு பரிந்துரை செய்துள்ளதாக லால்காந்த குறிப்பிட்டார்.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இந்தப் பாதை அமைப்புக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இந்த திட்டத்துக்கு கடன் நிதியளிக்க முன்வந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இந்த நிலையில் முதலாளித்துவ நாடுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊடாக தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர். இதன்படி ஜப்பானின் யசூசி அகாசியும் இந்தப் பாதை திறப்புக்கு வந்தமையை லால்காந்த சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# இலங்கை குறித்த காணொலிகள் பார்ப்பதை தவிர்த்தாரா பாலித?

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பிலான சனல் 4 காணொளி காட்சிகள் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் ஆசிய சமூகத்தவர்களுக்காக காண்பிக்கப்பட்டன.

இதன்போது இலங்கை சார்பில் பதிலளிப்பதற்காக இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹன மற்றும் பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா ஆகியோர் எதிர்பார்க்கப்பட்டனர். எனினும் அவர்கள் இருவரும் நிகழ்வுக்கு வருகை தரவில்லை.

தகவல்களின்படி கோஹனவுக்கான சந்திப்புக்கள் மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ அலுவல்கள் மாலை 6 மணியுடன் முடிவடைந்திருந்தன. இந்த நிலையில் அவர்கள் இருவரும் இல்லாத நிலையில் ஆசிய சமூகத்தவர்களுக்காக சனல் 4 காணொளிக் காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

கற்றறிருந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுவதற்கு முன்னதாக இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொள்வதனை பாலித வேண்டுமென்றே தவிர்த்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

# தரகுப் பணத்திற்காக வெளிநாடு செல்லும் பெண்கள் தொடர்பில் விசாரிக்க ஏற்பாடு

எஜமானர்களிடமிருந்து தரகுப் பணத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் வெளிநாடு செல்கின்ற வீட்டுப் பணிப்பெண்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கைப் பணிப்பெண்கள் வெளிநாடு செல்வதற்கு முன்னர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையத்தின் மூலம் எஜமானர்களினால் அவர்களுக்கு 40 ஆயிரம் ரூபா தரகு வழங்கப்படுவதாக பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க கூறினார்.

இதன்படி சில பெண்கள் தரகை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பலமுறை வெளிநாடு செல்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய பணிப்பெண்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் கோரியுள்ளார். (அ-2)

# அ.தி.மு.க.வில் இணைய வடிவேலு முடிவு



"தொலைத்ததை தொலைத்த இடத்திலேயே தேடுவதுதான் சரியாக இருக்கும்" என்பது வடிவேலுவுக்கு இப்போதுதான் புரிந்திருக்கிறது. அதனால்தான் அரசியலால் தொலைத்துவிட்ட சினிமா வாய்ப்பை மீட்டெடுக்க மீண்டும் அரசியலையே பயன்படுத்த முடிவு செய்திருக்கிறார் போலும்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு. க வின் பிரசார பீரங்கியாக வலம் வந்தவர் வடிவேலு. தனக்கே உரிய நகைச்சுவை பாணியில் அ.தி.மு.க கூட்டணியை மேடைகளில் வறுத்தெடுத்தார். அதிலும் விஜய காந்தை தனிப்பட்ட முறையிலும், அரசியல் ரீதியாகவும் வடிவேலு செய்த விமர்சனங்கள் பல்வேறு சர்ச்சைகளைக் கிளப்பியது. தி.மு.க ஆதரவு தொலைக்காட்சிகள் கருணாநிதி, ஸ்ராலினை விட அதிகமாகக் காட்டியது வடிவேலுவைத்தான்.

ஆனால், தேர்தலுக்குப் பின்னே எல்லாமே தலைகீழாகிப்போனது. அ.தி.மு.க அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்று ஆட்சியமைக்க, பெட்டிப் பாம்பாக அடங்கிப் போனார் வடிவேலு. அதுமட்டுமன்றி, "விஜயகாந் தான் எனக்கு எதிரி. எனவேதான் அவரை எதிர்த்து நான் பிரசாரம் செய்தேன். நான் அ.தி.மு.க வையோ, அம்மாவையோ விமர்சித்து எதுவும் பேசவில்லை" என்பதாகக் கூறி ஜெயலலிதாவின் கோபத்திற்கு ஆளாகாமல் தப்பித்துக் கொண்டார்.



ஆனாலும் அ.தி.மு.க வின் வெற்றி சினிமா வட்டாரத்திலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. சினிமாத்துறையில் அ.தி.மு.க ஆதரவாளர்களின் கை ஓங்கத் தொடங்கியதும் வடிவேலுவுக்கான சினிமா வாய்ப்புகள் குறைந்து விட்டன. தே.மு.க. வினரால் ஆபத்து வந்து விடுமோ என பயந்து, வடிவேலு சென்னையை விட்டுவிலகி, வசித்துள்ளார் என்பதும் நடந்திருக்கிறது.

இந்த சூழ்நிலையில் அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தி.மு.கவுக்கு ஆதரவாகவோ, விஜயகாந்துக்கு எதிராகவோ வடிவேலு எந்த மேடையிலும் ஏறவில்லை. காரணம், விஜயகாந்தை எதிர்க்கப்போய் அ.தி.மு.க.வின் எதிரியாக தன்னை முத்திரை குத்தி விட்டார்களே என்று நொந்து போயிருக்கிறார் வடிவேலு.

சினிமாவில் பிஸியாக இருந்த அவர், தி.மு.க காரராக தன்னைக் காட்டிக் கொண்டதிலிருந்து இப்போது சினிமா வாய்புக்களும் இல்லாமல் அரசியல் வாதியாகவும் இருக்க முடியாமல் இரண்டுக்கும் இடையில் சிக்கிக் கொண்டுள்ளார். இந்த நிலையில்தான் வடிவேலு அ.தி.மு.க வில் சேரப்போகிறார் என்று தகவல்.

இதற்கிடையே், விஜயகாந்தின் பால்ய நண்பரான இப்ராஹிம் ராவுத்தர் குறித்தும் ஒரு செய்தி உலாவுகிறது. விஜயகாந்திடமிருந்து ராவுத்தர் பிரிந்துவிட்டார் என்பது பலருக்கும் தெரிந்த விடயம்தான். ஆனாலும் அவர்கள் எதிரும்புதிருமாக இருக்கிறார்கள் என்பதோ, ராவுத்தர் மிகவும் கஷ்டமான சூழலில் வாடிக் கொண்டிருக்கிறார் என்பதோ பலருக்குத் தெரியாது. இப்போது விஜய காந்தின் நேரடி எதிரியாகிவிட்ட ராவுத்தர் அ.தி.மு.க.வில் சேரத் திட்டமிட்டிருக்கிறாராம். இது குறித்து அவர் அ.தி.மு.க.வின் முக்கிய புள்ளி ஒருவரை 'சந்தித்துப் பேசியிருக்கிறார் என்ற ஆதாரபூர்வமான செய்தியும் வெளியாகியுள்ளது.

"ராவுத்தரும் விஜயகாந்தும் எந்த அளவுக்கு நெருக்கம் என்பதை இந்த சினிமா உலகமே அறியும். சாதாரணமாக இருந்த விஜயகாந்தை ஒரு சக்ஸஸ்- புல் ஹீரோவாக்கிய பெருமை ராவுத்தரையே சேரும். விஜயகாந்தின் வளர்ச்சிக்காகவே திரு மணம் செய்து கொள்ளாமல் இருந்துவிட்டார் ராவுத்தர். ஆனால், விஜயகாந்தோ தனது திருமணத்திற்குப் பின் ராவுத்தரை சேர்க்கவில்லை. சினிமாவில் மிகப்பெரிய தயாரிப் பாளராக இருந்து அவர் இப்போது ஒன்றுமில்லாமல் இருக்கிறார்.

விஜயகாந் ஆளும்கட்சிக் கூட்டணியில் இடம்பெற்று விட்டதால் அமைதியாக இருந்தார் ராவுத்தர். இந்த உள்ளூராட்சி தேர்தலில் விஜயகாந்- அ.தி.மு.க கூட்டணி உடைந்துவிட்டது. தே.மு.க. படுதோல்வியடைந்தது. அதுமட்டுமன்றி விஜயகாந்தும் அ.தி.மு.க.வை நேரடியாகவே விமர்சிக்கத் தொடங்கிவிட்டார். இந்த சூழ்நிலையில் விஜயகாந்தைப் பற்றி அதிகளவில் தெரிந்தவரும், அவரால் அதிகளவில் பாதிக்கப்பட்டவருமான ராவுத்தர் அ.தி.மு.கவில் சேர முடிவெடுத்துள்ளார். அதற்கான முயற்சிகளில் தீவரமாக இறங்கியிருக்கிறார். கூடிய விரைவில் முதல்வர் ஜெயலலிதாவை நேரில் சந்தித்து அவர், அ.தி.மு.க வில் இணைய இருக்கிறார்" என்றனர்.

இது ஒரு புறமிருக்க, விஜயகாந்தின் நேரடி எதிரியாக மோதிக் கொண்டிருப்பவர் வடிவேலு. எதிரிக்கு எதிரி நண்பன் என்பது மட்டுமன்றி வடிவேலுவும் ராவுத்தரும் சினிமாக் காரர்கள் என்ற வழியிலும் இருவரும் அடிக்கடி பேசிக் கொள்வது வழக்கம். இந்த நிலையில் வடிவேலு வுக்கு ராவுத்தரின் அ.தி.மு.க முயற்சி பற்றிய விவரங்கள் தெரியவர, அவரும் ராவுத்தரிடம் அது பற்றி கேட்டிருக்கிறார்.

அ.திமு.க.வில் இணைவது பற்றிய விபரங்களையும் அதற்கான காய்கள் நகர்த்தப்பட்டு வருவது குறித்தும் கூறிய ராவுத்தர், வடிவேலுவையும் அ.தி. மு.க.வில் சேரும்படி கூறியிருக்கிறார். அப்படிச் சேர்ந்துவிட்டால் மீண்டும் பழையபடி சினிமாவாய்ப்புக்கள் தாராளமாகக் கிடைக்கும் என்று அறிவுரை சொல்லியிருக்கிறார். அதற்கு வடிவேலு தன்னையும் கார்டனுக்கு அழைத்துச் செல்லுமாறு ராவுத்தரிடம் கேட்டிருக்கிறாராம்.

ராவுத்தருடன் இணைந்து தானும் அ.தி.மு.க.வில் இணைந்து விடலாம் என்பதுதான் வடிவேலுவின் இப்போதைய திட்டமாம். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் தனக்கு சினிமா வாய்ப்புக்களே இல்லாமல் போனால், ஐந்து ஆண்டுகளுக்குப்பிறகு மீண்டும் சினிமாவில் பிஸியான நடிகராக உருவாவது என்பது இயலாத காரியம். அதுவும் ஒரு மாதம் மட்டுமே ஒரு அரசியற் கட்சிக்காக மேடையேறிய காரணத்திற்காக தனது சினிமா வாழ்க்கையை முடக்கிக் கொள்ள வடிவேலு விரும்பவில்லையாம் எனவே அவரும் அ.தி.மு.க.வில் சேர முடிவெடுத்துள்ளாராம்.

இது ஒருபுறமிருக்க இந்த இருவரையும் அ.தி.மு.கவில் சேர்க்க முயற்சிகள் மேற்கொண்டிருப்பது ஆர்.கே.நகர் சட்டமன்றத்தொகுதி எம்.எல்.ஏ.யும் வடசென்னை வடக்கு மாவட்ட அ.தி. மு.க. செயலாளருமான வெற்றிவேல் தான் என்கிறார்கள். இரண்டு முறை வெற்றிவேலை நேரில் சந்தித்துப் பேசியிருக்கிறார் ராவுத்தர். வடிவேலு தரப்பிலிருந்தும் வெற்றி வேலிடம் பேசப்பட்டுவிட்டது. வடிவேலுவும் வெற்றி வேலை ஒருமுறை நேரில் சந்தித்துப் பேசியுள்ளதாகவும் கூறப்படுகிறது.



இது குறித்து வெற்றிவேல் தெரிவிக் கையில் "தி.மு.க. கூடாரமே காலியாகிக் கொண்டிருக்கிறது. பல்வேறு கட்சிக்காரர்களும் அம்மாவைச் சந்தித்து அ.தி.மு.க. வில் தங்களை இணைத்துக் கொள்கிறார்கள். அதன்படி யார் வேண்டுமானாலும் அ.தி.மு.க.வில் சேரலாம் ஆனால், வடிவேலுவும் ராவுத்தரும் என்னைச் சந்தித்துப் பேசினார்களா? அவர்கள் அ.தி. மு.கவில் சேரப் போகிறார்களா? என்ற விபரத்தையெல்லாம் நான் அம்மாவிடம் தான் தெரிவிக்க வேண்டுமே தவிர உங்களிடம் பேச முடியாது. ஆனாலும் யார் யார் கட்சியில் சேருகின்றார்கள் என்பதை கூடிய சீக்கிரத்தில் நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்வீர்கள். அதில் வடிவேலு, ராவுத்தர் என யாராக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்று கூறினார்.

அ.தி.மு.க. தரப்பில் பேசப்படுவது யாதெனில், "விஜயகாந் சமீப காலமாக அ.தி.மு.க.வை விமர்சித்துப் பேசிவருகிறார். அவருக்கெல்லாம் பதிலளிக்கவடிவேலு போன்றவர்களே போதும். எனவே அவர் அ.தி.மு.க. வருவதன் மூலம் அவருக்கு சினிமா வாய்ப்புக்கள் கிடைப்பது மகிழ்ச்சியான விடயமாக இருந்தாலும், விஜயகாந்தை விமர்சிக்க அவர் எங்களுக்கும் பயன் படுவார்" என்கின்றனர்.

எப்படியோ கூடியவிரைவில் அ.தி.மு.க. மேடைகளில் வடிவேலுவைப் பார்க்கலாம் என்பது மட்டும் புரிகிறது.

அ.தி.மு.கவில் சேர்வது குறித்து வடிவேலு தரப்பில் கேட்டதற்கு "அண்ணனுக்கு சினிமா வாய்ப்புக்கள் குறைந்துவிட்டன என்பதோ, அதற்காக கட்சி மாறுகிறார் என்பதோ வெறும் வதந்திதான். அடிப்படையில் அண்ணன் ஒரு நடிகர் அவ்வளவுதானே தவிர அரசியல் வாதியெல்லாம் கிடையாது. அவர் பல பேட்டிகளில் தனது அரசியல் ஈடுபாடுகள் குறித்து தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டார். அவரது கவனமெல்லாம் கலைத்துறையில் தான் இருக்கிறதே தவிர வேறு எங்கும் திரும்புவதில்லை. இப்போதைக்கு அவர் சற்று ஓய்வுக்காக ஒதுங்கியிருக்கிறார் அதை வைத்து இப்படிச் சொல்வது சரியல்ல" என்றனர்.

* * *

# இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் 11 பேர் உயிரிழப்பு

## இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை கடற்படையினால் கடந்த ஐந்து வருடங்களில் 11 இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 2011 ஆம் ஆண்டுக்குள் மாத்திரம் 164 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் தமிழகத்தை சேர்ந்தவர்களாவர் என்று இந்திய லோக் சபாவில் நேற்று முன்தினம் இந்திய உதவி வெளியுறவு அமைச்சர் பிரநீட் கவுர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களுக்குள் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்ட 30 சம்பவங்கள் வரை இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு இரண்டு நாட்டு மீனவர்களுக்கு எல்லை தாண்டி மீன்பிடிப்பதை தடுக்க புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று எட்டப்பட்டது. இந்நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஆயிரத்து 456 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு 127 இந்திய மீனவர்களே இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு நெருக்கடிக்கு மத்தியில்

## ஜே.வி.பி.எம்.பி.அஜித்குமார தெரிவிப்பு

(கொழும்பு)

வட மாகாணத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார தெரிவித்துள்ளார்.

வடக்கு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் சிறந்த முறையில் நடைபெறுவதாக அரசாங்கம் பிரசாரம் செய்து வருகின்ற போதிலும் உண்மை நிலைமை ம்ற்றிலும் மாறுபட்டுள்ளது.

இதன் காரணமாகவே இடம்பெயர் முகாம்களுக்கு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மெனிக்பாம் முகாமிற்கு தாம் செல்ல முயற்சித்த போதிலும் பாதுகாப்பு தரப்பினர் அதற்கு அனுமதி அளிக்கவில்லை எனவும் மீள்குடியேற்ற அமைச்சு அதிகாரிகளிடம் ஏற்கனவே இடம்பெயர் முகாம் விஜயம் குறித்து அனுமதி பெற்றுக் கொண்டபோதும் படையினர் தமக்கு அனுமதி வழங்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சந்தேக நபரின் வங்கிக் கணக்கிலிருந்து 20 ஆயிரம் ரூபாவை பெற்ற பொலிஸ்

(கொழும்பு)

போதைப் பொருள் வழக்கொன்றில் கைதான சந்தேக நபரின் வங்கிக் கணக்கிலிருந்து 20 ஆயிரம் ரூபாவை களவாக பெற்றுக் கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தருக்கெதிராக விசாரணை நடத்துமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தில் பணிபுரியும் சார்ஜன்ட் ரணில் என்பவரே இச்செயலைச் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதால் இது தொடர்பாக விசாரணை நடத்துமாறு கொழும்பு தெற்கு பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு கொழும்பு மேலதிக நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரின் வங்கி அட்டையின் கடவு இலக்கத்தை வற்புறுத்தி பெற்றுக் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் வங்கியிலிருந்து பணத்தை பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போதைப் பொருள் வழக்கில் சந்தேக நபராகவுள்ளவரின் மாதாந்த வங்கிக் கணக்கு விபரத்தை அவதானித்த அவரின் மனைவி 20 ஆயிரம் ரூபா மோசடியாக பெறப்பட்டுள்ளதை அறிந்ததாக சந்தேக நபரின் சட்டத்தரணி வசந்த பிட்டிகல நீதிமன்றில் தெரிவித்தார்.

வங்கியின் கண்காணிப்பு கமராவில் பொலிஸ் உத்தியோகத்தரின் படம் பதிவாகியிருந்ததாக தெரிவித்த சட்டத்தரணி அக்கமராவின் பதிவுகளை அழிக்க வேண்டாம் என வங்கிக்கு உத்தரவிடுமாறும் நீதவானைக் கோரியுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் நடப்பது பொலிஸ்ருக்கு வெட்கக் கேடானது என சுட்டிக்காட்டிய நீதவான் பிரஹர்ஷா ரணசிங்க இது குறித்து விசாரிக்குமாறு கொழும்பு தெற்கு பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# நிர்வாக சட்டமூலம் மீளப்பெறப்படும்

நகர மற்றும் கிராமிய நிர்வாக சட்ட மூலத்தை மீளப் பெற்றுக் கொள்வதாக அமைச்சர் தினேஸ்குணவர்த்தன நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். உயர் நீதிமன்றம் இது தொடர்பில் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் இந்த சட்ட மூலத்தை மீளப்பெற்றுக் கொள்வதாக குறிப்பிட்டார்.

வரவு செலவுத்திட்டத்தின் குழுநிலைவிவாதத்தின் 6 ஆம் நாள் விவாதம் நடைபெறுகிறது. கைத் தொழில் உள்ளிட்ட 5 அமைச்சுக்கள் பலவற்றுக்கான ஒதுக்கங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது. (அ-2)




★ 1582-(ஜூலியன் ஞாயிற்றுக்கிழமை) - பிரான்ஸ் அடுத்த நாளை திங்கட்கிழமை டிசெம்பர் 20 (கிரெகோரியன்) ஆக்கியது.

★ 1793-நியூயோர்க் நகரின் முதலாவது நாளிதழ் தி அமெரிக்கன் மினேர்வா வெளியிடப்பட்டது.

★ 1856-ஈரானிய நகரம் புஷேஹர் பிரித்தானிய ஆக்கிரமிப்புப் படைகளிடம் வீழ்ந்தது.

★ 1905-பிரான்சில் அரசையும் கிறிஸ்தவ தேவாலயங்களையும் பிரிக்கும் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.

★ 1917-பிரித்தானியர், பாலஸ்தீனத்தின் ஜெருசலேம் நகரைக் கைப்பற்றினர்.

★ 1922-போலந்தின் முதலாவது ஜனாதிபதியாக கப்ரியேல் நருட்டோவிச் தெரிவு செய்யப்பட்டார்.

★ 1937-ஜப்பானியப் படைகள் சீன நகரான நான்ஜிங்கைத் தாக்கின.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய மற்றும் இந்தியப் படைகள் இத்தாலியப் படையினரை எகிப்தில் தாக்கின.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: சீனக் குடியரசு, கியூபா, குவாத்தமாலா, பிலிப்பைன்ஸ் ஆகியன ஜேர்மனி மற்றும் ஜப்பான் மீது போரை அறிவித்தன.

★ 1946-இந்திய சட்டசபை ராஜேந்திர பிரசாத் தலைமையில் அமைக்கப்பட்டது.

★ 1953-ஜெனரல் எலெக்ட்றிக் நிறுவனம் தனது நிறுவனத்தில் பணியாற்றிய கம்யூனிஸ்ட்கள் அனைவரையும் பணிநீக்கம் செய்தது.

★ 1961-பிரித்தானியாவிடம் இருந்து தங்கினீக்கா சுதந்திரம் பெற்றது.

★ 1979-பெரியம்மை நோய் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. மனித உயிர்க்கொல்லி நோயொன்று முற்றாக அழிக்கப்பட்டது இதுவே முதலாவதாகும்.

★ 1986-இந்தியைத் திணிக்கும் அரசியல் சட்ட நகரை எரித்ததற்காக தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி உள்ளிட்ட 10 தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

★ 1990-லெக்வலேசா போலந்தின் முதல்ாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியானார்.

★ 1992-வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ், இளவரசி டயானா இருவரினதும் பிரிவினை அறிவிக்கப்பட்டது.

★ 1995-உலகின் முதலாவது 24 மணி முழுநேர தமிழ் வானொலி ஒலிபரப்பு கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்னும் பெயரில் கனடாவின் டொரண்டோ நகரில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது.

★ 2003-மொஸ்கோ நகர மத்தியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 6 பேர் உயிரிழந்தனர்.

★ 2006-மொஸ்கோவின் மருத்துவமனை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி 45 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்பு

★ 1946-சோனியாகாந்தி, இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர்

### சிறப்பு நாட்கள்

★ தான்சானியா-சுதந்திர தினம் (1961)

★ ஐ.நா. சபை- அனைத்துலக ஊழல் எதிர்ப்பு தினம் (2003)



★ 2006-ஈழத்துக் கவிஞர் சுவில் வரத்தினம் (சு.வி)(பி.1950)

# மால்வெயர் பிரச்சினைகளுக்கு தீர்வு...

உங்களுடைய கணனியை கெடுதல் விளைவிக்கும் மால்வெயர் புரோகிராம்கள் பாதித்து விட்டனவா? அதற்கான அறிகுறிகள் தெரிகின்றனவா? வழக்கத்திற்கு மாறாக கணனி மெதுவாக இயங்குகிறதா? நிறைய பொப் அப் பெட்டிகள் கிடைக்கின்றனவா? புதுப்புது பிரச்சினைகள் தலை தூக்கு கின் றனவா? அப்படியானால் உங்கள் கணனியை வைரஸ், ஸ்பைவெயர் அல்லது வேறு ஏதேனும் மால்வெயர் புரோகிராம், கள் பாதித்திருக்கக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

இந்த பிரச்சினைகள், ஹார்ட் வெயரில் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் தென்படலாம். இருப்பினும் மால்வெயர் இருக் கின்றனவா என்ற சோதனை செய்து உறுதி செய்து கொள் வது நல்லது.

✦ சேப் மோட்: உங்களுடைய கணனியை இன்டர்நெட் இணைப்பிலிருந்து நீக்கவும். கணனியை சுத்தப்படுத்த நீங்கள் தயாராகும்வரை இன்டர்நெட் இணைப்பினைத் தர வேண்டாம். இதன்மூலம் உங்கள் கணனியில் உள்ள மால்வெயர் பரவுவதையும் உங்கள் தனிப்பட்ட தகவல்களை மற்றவர்களுக்கு அனுப்புவதனையும் தடுக்கலாம்.

உங்களுடைய கணனியில் மால்வெயர் இருப்பதாக உணர்ந்தால் சேப் மோடில் (Safe Mode) பூட் செய்திடவும். இதற்கு கணனியை ஷட் டவுண் செய்து பின்னர் எப் 8 கீயின் இடம் அறியவும். பின்னர் பேர்சனல் கணனியை இயக்கி திரையில் ஏதேனும் தென்பட்டவுடன் எப் 8 கீயினைத் தட்டிக் கொண்டே இருக்கவும். இதனால் Advanced Boot Options என்ற மெனு கிடைக்கும். அதில் Safe Mode With Net working என்ற ஒப்ஷனைத் தேர்ந்தெடுத்து என்டர் தட்டவும். சேப் மோடில் உங்கள் கணனி இதற்கு முன் இருந்ததைக் காட்டிலும் சற்று வேகமாக இயங்குவதனைக் காணலாம். அவ்வாறு இயங்கினால் மால்வெயர் நிச்சயம் உங்கள் கணனியில் உள்ளது.


✦ தற்காலிக பைல் நீக்கம்:

சேப் மோடில் இருந்தபடி வைரஸ் ஸ்கான் செய்திட நீங்கள் விரும்பலாம். அதற்கு முன்னர் தற்காலிக பைல் களை நீக்கவும். இதனால் டிஸ்க் இடம் சற்று கூடுதலாகக் கிடைக்கும். வைரஸ் ஸ்கானிங் வேகமாக நடைபெறும். விண்டோஸ் இயக்கத்துடன் வரும் Disk Cleanup utility என்பதைப் பயன்படுத்த Start, All Programs (or just Programs), Accessories, System Tools, Disk Cleanu என செல்லவும்.

✦ மால்வெயர் ஸ்கானர் தரவிறக்கம்:

ஏற்கனவே உங்கள் கணனியில் செட் செய்து வைத்தி ருந்த அண்ட்டி வைரஸ் புரோகிராமிற்குப் பதிலாக வேறொரு மால்வெயர் ஸ்கானிங் அல்லது எதிர்ப்பு புரோகிராமினை இயக்கவும். இதற்காக இணையத்திலிருந்தும் இறக்கிக் கொள்ளலாம். இலட்சக்கணக்கில் மால்வெயர் புரோ கிராம் கள் மற்றும் வைரஸ்கள் இருப்பதால் எந்த ஒரு அண்ட்டி வைரஸ் மற்றும் மால்வெயர் எதிர்ப்பு புரோகிராம்கள் அவை அனைத்தையும் நீக்கும் என எண்ண வேண்டாம்.

நாம் எப்போது நாமாக இயங்குகிறோமோ அப்போது இயங்கத் தொடங்கி மால்வெயர்களை அழிக்கும் புரோகிராம் கள் பல உள்ளன. அவற்றில் ஒன்றை தரவிறக்கும் செய்து பயன்படுத்தவும். அதனை அடுத்து கணனியில் உள்ள அண்ட்டி வைரஸ் புரோகிராமினைப் பயன்படுத்தலாம். கீழ்க் காணும் புரோகிராம்கள் இந்த வகையில் அதிகப் பயனுள் ளவை. ஆ Bit Defender Free Edition, kaspersky Virus Removal Tool, Malwarbytes, Norman Malware Cleaner மற்றும் Super Anti Spyware.



✦ மால் வெயர் பைட்ஸுடன் (Malwarebytes) ஸ்கான்:

இந்தவகையில் மிகச் சிறந்த Malwarebytes புரோகிரா மினை இயக்குவது நல்லது. உங்களிடம் இந்தப் புரோகிராம் இல்லை என்றால் http:// www. malwarebytes.org. என்ற இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இதனை கணனியில் இன்ஸ்டோல் செய்த பின்னர் இணைய இணைப்பினை நிறுத்திவிட்டு ஸ்கான் செய்திடலாம். உங்கள் கணனியில் இதனை தரவிறக்கம் செய்திட முடியாத போது மற்றொரு கணனியில் இணைய இணைப்பில் பெற்று இதில் இன்ஸ்டோல் செய்திடலாம்.

மால்வெயர் பைட்ஸ் ஸ்கான் செய்திடுகையில் Perform quick scan என்ற ஒப்ஷனைத் தேர்ந்தெடுத்து இயக்கவும். அதிக பட்சம் 20 நிமிடங்கள் முதல் 30 நிமிடங்கள் வரை இந்த ஸ்கான் பணி செயற்படுத்தப்படும். இந்த பணி நடைபெறு கையில் இந்த ஸ்கானர் மறைந்து பின்னர் அதனை மீண்டும் பெற இயலவில்லை என்றால் உங்கள் கணனியில் ரூட்கிட் என்ற வைரஸ் அல்லது அதனைப் போன்று செயற்படும் வைரஸ் உள்ளது என்பது உறுதி. ஏனென்றால் இந்த வகை வைரஸ்கள் எந்த ஸ்கானரையும் இயங்கவிடாமல் அவற்றை யும் முடக்கி விடும் தன்மை கொண்டன. அப்படிப்பட்ட வைரஸ் இருந்தால் உங்கள் பைல்கள் அனைத்தையும் பக் அப் செய்த பின்னர் விண்டோஸ் இயக்கத்தை மீண்டும் ரீ இன்ஸ்டோல் செய்வதே சிறந்த வழியாகும்.

மால்வெயர் பைட்ஸ் வெற்றிகரமாக இயங்கி முடித்த பின்னர் பைல்களின் நிலை குறித்த அறிக்கை ஒன்று டெக்ஸ்ட் பைலாகக் கிடைக்கும். சந்தேகப்படும்படியான பைல்களையும் பாதிக்கப்பட்ட பைல்களையும் பட்டியலிட்டுக் காட்டும். இவற்றை நீக்கவா என்ற கேள்வியும் கேட்கப்படும். இவற்றை நீக்குவதே நல்லது.

இவை நீக்கப்பட்டவுடன் மால்வெயர் பைட்ஸ் உங்கள் கணனியை மீண்டும் இயக்குமாறு கேட்கும். ஓகே கிளிக் செய்து இயக்கவும். மால்வெயர் புரோகிராம்கள் நீக்கப்பட்டு கணனி மறுபடியும் இயங்கத் தொடங்கியவுடன் வழக்கமான அண்ட்டி வைரஸ் புரோகிராம் மூலம் கணனியில் அனைத்து ட்ரைவ்களையும் சோதனை செய்திடவும் .

✦ பிரவுசரை சரி செய்க:

மால்வெயர் தொகுப்புக்கள் விண்டோஸ் சிஸ்டம் பைல் களைக் கெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அத்துடன் நம்பிரவுசரில் மாற்றங்களை ஏற்படுத்தி தொடர்ந்து கணனி யில் இத்தகைய மால்வெயர் புரோகிராம்கள் நுழைந்திட வழி வகுக்கின்றன. எனவே அடுத்த இணைய இணைப்புக்கு முன்னர் பிரவுசரின் அனைத்து செட்டிங்குகளையும் ஒரு முறை சோதனை செய்து பார்த்து விடுவது நல்லது.

✦ சிஸ்டம் பைல் செய்தல் :

ஒன்றும் செயற்படுத்த முடியாமல் போய் விண்டோஸ் இயக்க பைல்களை மீண்டும் பதிப்பதுதான் ஒரே வழி என் றால் அனைத்து பைல்கள் ட்ரைவர்களை பக் அப் எடுக்க வேண்டும். இதற்கு Double Driver என்ற புரோகிராம் உதவும். உங்களிடம் ட்ரைவர் டிஸ்க்குகள் இல்லை என்றா லும் இந்த புரோகிராம் உங்களுக்கு உதவிடும்.

✦ கணனியை சுத்தமாக வைத்திடுக:


கணனியில் எப்போதும் அப்டேட் செய்யப்பட்ட அண்ட்டி வைரஸ் புரோ கிராம் செயற்பாட்டில் இருக்க வேண்டும். கட்ட ணம் செலுத்தி இதனை வாங்கி ஒவ்வொரு ஆண்டும் புதுப் பிக்க இயலாவிட்டால் இலவசமாகக் கிடைக்கும் Avast, AVG, Comodo மற்றும் Microsoft Security Essentials போன்ற தொகுப்புக்களை பயன்படுத்த வேண்டும். வழக்க மான அண்ட்டி வைரஸ் புரோகிராம்களுடன் Open DNS போன்ற புரோகிராம்களைப் பயன்படுத்துவதும் மால்வெயர் புரோகிராம்களிடமிருந்து கணனியை காப்பாற்றும் நம் பணிகளுக்கு என்றும் கணனியை நம்பி இருப்பதால் நம் முக்கிய ஆவணங்களை அதில் மட்டுமே பல வேளைகளில் பதிந்து வைத்திருப்பதால் கணனியை வெளித் தாக்குதல் களில் இருந்து காப்பாற்றுவது நல்லது.




# கணனிக்குள் என்ன இருக்கிறது?

நாம்தினந்தோறும் கணனியைப் பயன்படுத்துகிறோம். ஆனால், பார்ப்பது எல்லாம் மொனிட்டர் திரையைத்தான். உங்கள் கணனிக்குள் என்ன இருக்கிறது என்றாவது பார்த் திருக்கிறீர்களா? ஒருசிலர் சிபியூ கேசினை மூடி வைத்த சிறிய பெட்டிக்குள் வைத்து இயக்குவார்கள். இயக்கும்போது மட் டும் அதனைத் திறந்து வைத்துக் கொள்வார்கள். எப்படி இருந் தாலும் அதன் வெளிப்புறத்தைத்தானே பார்க்கிறோம்.

சரி, கணனிக்குள் என்ன இருக்கப் போகிறது. மதர்போ ர்ட்டு, ஹார்ட் டிஸ்க், டிரைவ்கள் மற்றும் இவற்றை இணைக் கும் கேபிள்கள். இவற்றைப் பார்த்துப் பெரிதாக என்ன தெரிந்து கொள்ளப் போகிறோம். நாம் அறிந்து கொள்ள வேண்டியது எல்லாம் நம் ஹார்ட் டிஸ்க் கொள்ள ளவு என்ன? சிபியூவின் தன்மை என்ன? அதன் சைக்கிள் ஸ்பீட் என்ன? ரம் எவ்வளவு? இன்னும் எத்தனை போர்ட் உள்ளன? எத்தனை சாதனங்களை இணைக் கலாம்? ஓ.எஸ். எத்தனாவது பதிப்பு? அதில் சேர்வீஸ் பக் என்ன இணைந்துள்ளது? என்பவற்றை அறிந்து கொள் வதில்தான் நன்மையே உள்ளது.



அடேயப்பா எத்தனை விடயங்கள்! இவற்றை எல்லாம் எப் படி அறிந்து கொள்வது? ஒவ்வொன்றாய் தெரிந்து கொள்ள முயற் சித்தால் நேரம் எவ்வளவு செலவாகும்? இதற்கெல்லாம் ஒரு வழி தரும் வகையில் சில சொப்ட்வெயர் தொகுப்புகள் இணை யத்தில் கிடைக்கின்றன. அவற்றில் சிறந்ததாக இரண்டு தெரிய வந்தன. அவை குறித்த தகவல்களை இங்கு காணலாம்.

முதலாவதாக CPUID என்ற நிறுவனம் தயாரித்து வழங்கும் CPUZ என்ற புரோகிராம். இது ஒரு டயாக்னஸ்டிக் புரோகிராம். அதாவது மேலே சொன்ன அனைத்து கணனி பிரிவுகளையும் அலசி ஆராய்ந்து அதன் தன்மைகளை ஒரு டெக்ஸ்ட் பைலாகத் தரும் புரோகிராம். இதனை http:// www.cpuid.com/cpuz.php என்ற தளத்தில் காணலாம். இதனை கொப்பி செய்து உங்கள் கணனியில் நிறுவி இயக்கி னால் கணனியில் உள்ள சிலிக்கான் பாகங்களின் இயல்பு அனைத்தையும் தெரி ந்து கொள்ளலாம்.

CPUZ புரோகிராமினைக் காட்டி லும் கூடுதல் திறன் கொண்ட புரோகிராம் ஒன் றினைக் காண முடிந்தது. அதன் பெயர் Sandra. இதனை வழங்குவது Sisoftware என்ற நிறுவனம். இது அடிப்ப டை யில் இலவச மாய்க் கிடைக் கிறது. ஆனால், கூடுதல் தக வல்கள் பெற கட்டணம் செலுத் திப் பெறலாம். இலவசமாய்க் கிடைக்கும் புரோகிராம் நமக்குப் போதும். இது மேலே சொன்ன CPUZ புரோகிராம் தரும் அனைத்து தகவல் களையும் தருவதுடன் கூடுதலாகச் சில தகவல்க ளையும் தருகிறது.

கணனியின் பிரிவுகள்அனை த்தும் இன்னும் சிறப்பாக செய ற்பட சில பரிந்துரைகளையும் தரும். இந்த புரோகிராமினை http://www.sisoftware.net என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து இலவசமாகப் பெறலாம்.

எனவே கணனிக்குள் என்ன இருக்கிறது? என்ற கேள் வியைப் பார்த்தவுடன் ஸ்குரு டிரைவரை எடுத்துக் கொண்டு இறங்கிவிட வேண்டாம். மேலே சொன்ன சொப்ட்வெயர் புரோகிராம்களை இறக்கிப் பதிந்து இயக்கிவிட்டு கைகளைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தாலே போதும்.

# உங்களுக்கு தெரியுமா?

✦ இணையத்தளத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் மொழியாக ஆங்கிலம் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக ஜேர்மன், ஜப்பானீஸ், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஸ்வேதிஷ், இத் தாலியன், போர்த்துகீசியம், டச், நோர்வேஜியன், பின்னிஷ், செக், ரஷ்யன் மற்றும் மலாய் ஆகியவை வருகின்றன.

✦ பைட் (byte) என்னும் சொல் by eight என்பதன் சுருக்கமாகும். pixel என்பது picture cell or picture element என்பதன் சுருக்கமாகும்.

✦ வை- பி என்னும் தொழில்நுட்பம் ரேடியோ அலை வரிசைகளைப் பயன்படுத்துகிறது. இதனால் டேட்டாவை அனு ப்புவர் மற்றும் பெறுபவர் இடையே எந்த வயர் இணைப் பும் தேவையில்லை. பொதுவாக வை-பி. இத்தகைய இணைப்பினை 50 மீற்றர் சுற்றளவிற்குத் தருகிறது. அதிக வை-பி இணைப்பு கொண்டிருக்கும் நாடுகளில் அமெரிக்கா முதல் இடத்தையும் அடுத்ததாக பிரிட்டன், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகியவையும் இடம்பெறுகின்றன.

✦ ஒரு சிடியில் எழுதப்படும் டேட்டாவின் அளவு பொது வாக நிமிடங்களில் தான் கூறப்படுகிறது. 74 நிமிடங்கள் என்பது ஏறத்தாழ 650 மெகா பைட்ஸ். 63 நிமிடம் என்பது 550 மெகா பைட்ஸ்.

✦ ஈதர்நெட் (Ethernet) என்பது ஸெராக்ஸ் நிறுவனத் தின் ட்ரேட் மார்க். அதேபோல யூனிக்ஸ் என்பது AT-T நிறுவனத்தின் ட்ரேட் மார்க்.

✦ ஏதேனும் புரோகிராம் அல்லது பைலுக்கான ஷோர்ட் கட் ஒன்றை ஸ்டார்ட் மெனுவில் இடம்பெறுமாறு செய்திட லாம். இதற்கு டெஸ்க் டொப்பில் உள்ள அந்த ஷோர்ட் கட் ஐகனை மவுஸால் இழுத்து வந்து ஸ்டார்ட் பட்டனில் விட்டு விடவும். இனி ஸ்டார்ட் பட்டனில் கிளிக் செய்து பார்த்து அந்த ஷோர்ட் கட் மெனுவில் உள்ளதை உறுதி செய்திடவும். இதனை எப்படி நீக்கலாம். அதுவும் மிகவும் எளிதே. ஸ்டார்ட் பட்டன் அழுத்தி எந்த புரோகிராமினை அந்த பட்டியலில் இருந்து மட்டும் நீக்க வேண்டுமோ அதன் மீது கேர்சரை வைத்து ரைட் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில் Remove from this list என்று இருக்கும் பிரிவில் கிளிக் செய்துவிட்டால் அது நீக்கப்படும்.

# மத கூட்டங்களை மீறியவருக்கு ஐந்நூறு கசையடி தண்டனை

(சிட்னி)

அவுஸ்திரேலியாவை சேர்ந்த மன்சூர் அல்மரிபி (வயது-45) என்பவர் ஹஜ் யாத்திரைக்காக அரேபியா சென்றிருந்தார். அங்கு அரேபியாவின் தீவிரமான மத சட்டங்களை மீறும் வகையில் நடந்து கொண்டதற்காக 500 கசையடி தண்டனையும் ஓராண்டு சிறை தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சகம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

மேலும் மன்சூருக்கு கருணை காட்டுமாறு சவுதி அரேபிய அரசிடம் சவுதி நாட்டுக்கான அவுஸ்திரேலிய தூதர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து சவுதி அரேபிய சட்ட அமைச்சகம் எந்த கருத்தையும் தெரிவிக்க மறுத்து விட்டது.மன்சூருக்கு 5 மகன்கள் உள்ளனர். அவர் களில் ஒருவரான முகமது அல்மரிபி கூறு கையில், எனது தந்தைக்கு 500 கசையடி கொடுத்தால் அவரால் உட்கார முடியாத நிலை ஏற்படும்.

அதிகபட்சம் 50 வயதுக்குமேல் அவரால் உயிர்வாழ முடியாது என வருத்தத்துடன் தெரிவித்தார்.

(அ-2)

# முல்லைப் பெரியாறு விவகாரம் ஜெயலலிதா அவசர ஆலோசனை



முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையால் தமிழகம்- கேரளா எல்லையில் பதற்றம் நீடிக்கிறது. இந்த நிலையில் முதலமைச்சர் ஜெயலலிதா அவசர ஆலோசனை மேற்கொண்டார்.

முல்லைப்பெரியாறு அணை பலமிழந்து விட்டது. பழைய அணைக்கு பதில் புதிய அணைகட்ட வேண்டும். அதுவரை அணையின் நீர்மட்டத்தை 120 அடியாக குறைக்க வேண்டும் என்று கேரளா வலியுறுத்தி வருகிறது.

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் இருந்து குமுளி, கம்பம், மொட்டு, போடிமெட்டு, வழியாக கேரளா செல்லும் அனைத்து தமிழக வாகனங்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. 3 நாட்களாக தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது.

கம்பம் நகரில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்ததால் இந்த பகுதியில் உள்ள அரச பாடசாலை மற்றும் மெட்ரிக்கு லேசன் பாடசாலைகள் என அனைத்தும் விடுமுறை விடப்பட்டது.

மேலும் கம்பம் மெட்டுச்சாலையில் வாகன போக்குவரத்து இயங்கவில்லை. ஐயப்ப பக்தர்கள் வந்த வாகனங்கள் கூடலூர் பெற்றோல் நிலையம் அருகே திருப்பி விடப் பட்டன. இதேபோல பாதயாத்திரையாக சென்ற ஐயப்ப பக்தர்கள் செல்ல அனு மதிக்கப்படவில்லை.

கேரள முதல் மந்திரி உம்மன்சாண்டி உருவப் பொம்மையை அப்பகுதி மக்கள் ஊர்வலமாக கொண்டு வந்து பெட்றோல் பங்க் அருகே தீவைத்து எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

கேரளாவில் தமிழர்கள் கடை மற்றும் ஐயப்ப பக்தர்கள் தாக்கப்பட்டதாக வெளியான தாக்குதல் காரணமாக தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் கேரளவுக்கு சொந்தமானவர்களின் கடைகள், வணிக நிறுவனங்கள் தாக்குதலுக்கு இலக்கானது.


சென்னை சைதாப்பேட்டையில் பேக்கரி ஒன்று தாக்கப்பட்டது. இதுபோல கோவை, தஞ்சை ஆகிய இடங்களிலும் தாக்குதல்கள் நடைபெற்றன. முல்லைப்பெரியாறு அணைப்பிரச்சினை காரணமாக தமிழக கேரள எல்லைப் பகுதிகளில் இன்னமும் முழுமையாக பதற்றம் தணியவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக வன்முறை நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் 15, 16 ஆம் திகதிகளில் டில்லியில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் தமிழக அரசு சார்பில் அதிகாரிகள் கலந்து கொள்வதா? வேண்டாமா? என்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டத்தில் முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தை தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை சமாளிப்பது, சட்டம்,ஒழுங்கை நிலைநாட்டுவது, தமிழக கேரள எல்லை பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்துவது உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

முல்லைப் பெரியாறு அணை அருகில் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க அதிரடிப்படை பொலிஸாரை குவிக்க தீர்மானிக்கப்பட்டது. மேலும் அணை அருகே கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கவும் ஜிபிஎஸ் (சாட்டிலைட்) தொழில்நுட்ப உதவியுடன் அணைப் பகுதியை தொடர்ந்து கண் காணிக்கவும் முடிவு செய்யப்பட்டது. முதல்வரின் உத்தரவை தொடர்ந்து முல்லைப் பெரியாறு அணை அருகில் எந்தெந்த பகுதியில் கமரா அமைக்கலாம் என்பது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆலோசனை மேற்கொண்டனர்.அதைத் தொடர்ந்து ஒரு குழு அமைக்கப்பட்டது. குழுவினர் நேற்று காலை அணை அருகில் கமரா வைப்பதற்கான இடத்தை தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.இந்த குழுவினர் சில இடங்களை தேர்வு செய்துள்ளதாக தெரிகிறது. இதைத் தொடர்ந்து அந்த பகுதியில் விரைவில் கமரா பொருத்தப்படவுள்ளது. (அ-2)

# முல்லைப்பெரியாறு விவகாரம் பிரதமர் மன்மோகன் ஆலோசனை



(புதுடில்லி)

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் மூத்த அமைச்சர்களுடன் பிரதமர் மன்மோகன் சிங் ஆலோசனை நடத்தியுள்ளார். தமிழக-கேரள மாநிலங்களுக்கிடையே முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தீவிரம் அடைந்து வரும் நிலையில் மூத்த அமைச்சர்களுடன் பிரதமர் மன்மோகன்சிங் ஆலோசனை நடத்தியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின் நடைபெற்ற இந்த ஆலோசனையில் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், வேளாண்துறை அமைச்சர் சரத் பவார், நீர்ப்பாசனத்துறை அமைச்சர் பவன்குமார் பன்சால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த சில வாரங்களாக இப்பிரச்சினை தொடர்பாக பல்வேறு குழுவினரும் பிரதமரைச் சந்தித்து வருகின்றனர். ஏற்கனவே பிரதமரை கேரள முதல்வர் உம்மன் சாண்டி கடந்த வாரம் சந்தித்தார்.

ஆனால், அந்தச் சந்திப்பு தொடர்பான விபரங்கள் வெளியிடப்படவில்லை. இதனிடையே முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பு பணியில் மத்திய தொழில் பாதுகாப்பு படையை ஈடுபடுத்த வேண்டும் என்று தமிழக அரசு தாக்கல் செய்த மனு உச்ச நிதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பிரச்சினை தொடர்பாக பிரதமருக்கு முதல்வர் ஜெயலலிதா 3 கடிதங்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அதிநவீன ஏவுகணைகளை வாங்க தென்கொரியா திட்டமிட்டுள்ளது

அதிக தூரம் சென்று தாக்கும் திறன் கொண்ட அதிநவீன ஏவுகணைகளை வாங்க தென்கொரியா திட்டமிட்டுள்ளது.

170 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வாங்கப் போவதாகவும்,அதற்கு இன்னும் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைக்கவில்லையென்று தென்கொரிய பாதுகாப்புத் துறையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் தாக்குதலுக்கு பதிலடி தரவே இதுபோன்ற ஏவுகணைகள் வாங்கப்படுவதாக தென்கொரிய டைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

சியோலில் இருந்து ஏவப்படும் இந்த ஏவுகணைகள் வடகொரியாவின் பியோன் ஜியாங் பகுதியைத்தாக்கும் திறன் கொண்டது.

இந்த ஏவுகணைகளை அமெரிக்காவின் லாக்ஹீட் மாட்டீன் எனும் நிறுவனமும், ஜேர்மனியில் டாரஸ் நிறுவ்னத்திடமும் வாங்க திட்டமிட்டுள்ளது

இந்த இரு நிறுவனத்தின் ஏவுகனைகளையும் சோதித்த பின் ஏவுகனையின் செயற்பாடு,விலை மற்றும் தொழில்நுட்ப தகவல் பரிமாற்றம் போன்ற காரணிகளைக் கொண்டு அடுத்த வருடம்செப்டெம்பர் மாதத் துக்குள் இறுதி முடிவு எடுக்கப்படும் எனத்தெரிகிறது. இதற்காக தென் கொரியா ரூ 38ஆயிரத்து 800 கோடி டொலர் நிதி ஒதுக்கியுள்ளது. (அ-2)

# பாக்.இற்கு அளிக்கப்படும் உதவிகளுக்கு பலன் கிடைத்து வருகின்றது- அமெரிக்கா


பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட்டு வரும் அமெரிக்க உதவிகளுக்கு பலன் கிடைத்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதனால் அந்நாட்டுக்கு அளிக்கப்படும் அமெரிக்க உதவிகள் தொடரும் என்று தெரிவித்துள்ளது.

அமெரிக்க உதவிகளால் இரு நாடுகளுமே பயனடைந்து வருகின்றன. பாகிஸ்தானின் ஜனநாயக அமைப்புக்களை பலப்படுத்துவதும்,அந்நாட்டு பொருளாதாரத்துக்கு ஊக்கமளிப்பதும் தான் நாம் அடைய நினைக்கும் நீண்டகாலப் பலன்கள் என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளர் மார்க் டோனர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க குடியரசுக்கட்சியின் செனட் உறுப்பினர்கள் ஜான் மெக்கெய்னும், லிண்ட்ஸ் கிரஹாமும் பாகிஸ்தானுடனான அமெரிக்க உறவுகளை முழுமையாக மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறியிருந்த நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நேட்டோ தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் உயிரிழந்த விடயம் அந்நாட்டு மக்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதையே பாகிஸ்தானின் பதில் நடவடிக்கைகள் காட்டுவதாக டோனர் தெரிவித்துள்ளார்.

அது மிகவும் துயரமான சம்பவம். இந்த புதிய சவாலை வெற்றி கொள்ள தொடந்து முயற்சித்து வருகிறோம் என்று அவர் தெரிவித்தார். (அ-2)



ரஷ்யா வந்திருந்த இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் அவிக்டர் லைபர்மேன் மொஸ்கோ நகரில் அந்நாட்டு பிரதமர் விளாடிமிர்புடினை சந்தித்து கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக திலக் கருணாரட்ன

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிலதிபருமான திலக் கருணாரட்ன பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அவர் தனது கடமையை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்பார்.

இதற்கான நியமனக் கடிதம் தனக்கு கிடைத்துள்ளதாகவும் இன்று தனது பொறுப்பைக் கையேற்கவுள்ளதாகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிலதிபருமான திலக் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக இருந்த இந்திராணி சுகததாச கடந்த வாரம் தனது பதவியை இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து திலக் கருணாரட்ன இதன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

களுத்துறை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிஹல உறுமய கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் மற்றும் தலைவருமான திலக் கருணாரட்ன இரசாயன பொருட்களை இறக்குமதி செய்யவும் மல்ரிபோம் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவபணிப்பாளராகவும்உள்ளார்.(அ-2)

# மீனவர்களை விடுவிக்காதுவிட்டால் பாம்பன் பாலத்தை முற்றுகையிடுவோம்

(கொழும்பு)

இலங்கை சிறையில் வாடும் 5 இராமேஸ்வர மீனவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதிக்குள் விடுவிக்காவிட்டால் பாம்பன் பாலத்தை முற்றுகையிடுவோம் என்று இராமேஸ்வர மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் 5 பேரை இலங்கை கடற்படையினர் பிடித்துச் சென்று யாழ்ப்பாணம் சிறையில் அடைத்துள்ளனர்.

இதையடுத்து இராமேஸ்வரம் அருகே உள்ள தங்கச்சி மடத்தில் மீனவர்களும்பாதிக்கப்பட்ட குடும்பத்தினரும் உண்ணாவிரதம் மேற்கொள்கின்றனர்.

உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டவர்கள் கூறியதாவது, மூன்று முறை அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம். ஆனால் அவர்களின் பேச்சுவார்த்தை உறுதியை தரவில்லை. 19 ஆம் திகதி விடுதலை ஆவார்கள் என்று மத்திய அரசு சொன்னதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. இலங்கை சிறையில் வாடும் 5 இராமேஸ்வரமீனவர்களை 19 ஆம் திகதிக்குள் விடுவிக்காவிட்டால் பாம்பன் பாலத்தை முற்றுகையிடுவோம். மீனவர்கள் விடுதலை ஆகும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளனர்.

இப்போது கடந்த 10 நாட்களாக எந்த வருமானம் இல்லாமல் இருக்கின்றோம். 5 குடும்பங்களுக்காக ஏனைய மீனவர்களும் வேலை நிறுத்தத்தில் இருப்பதால் ஒட்டுமொத்த மீனவர்களும் கஷ்டத்தில் இருக்கின்றோம். (அ-2)

# டெங்கு நோயை கட்டுப்படுத்த பாக்.வைத்தியர் குழு இலங்கைக்கு

(கொழும்பு)

டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக பாகிஸ்தானைச் சேர்ந்த வைத்தியர் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

30 பேர் கொண்ட குழுவொன்றே நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்கள் மூன்று வாரகாலம் நாட்டில் தங்கியிருந்து டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் விதம் தொடர்பாக ஆய்வு செய்யவுள்ளனர்.

டெங்குக் காய்ச்சலை கட்டுப்படுத்துவது தொடர்பில் பாகிஸ்தானின் வைத்திய குழுவினருக்கு சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு அதிகாரிகள் தெளிவுபடுத்தவுள்ளனர்.

இதேவேளை இலங்கையைச் சேர்ந்த வைத்தியக் குழுவொன்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அந்த நாட்டு மக்களுக்கு டெங்கு நோய் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தியதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# உரிமை மாற்றப்படாத வாகனங்களுக்கு அபராதம்

கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து உரிமை மாற்றப்படாத வாகனங்களுக்கு அபராதம் அறவிடப்படும் என்று மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னரான காலப்பகுதியில் உரிமை மாற்றப்படாத வாகனங்களுக்கு அபராதம் அறவிடப்படமாட்டாது என திணைக்களத்தில் ஆணையாளர் நாயகம் லலித் தர்மப்பிரிய தெரிவித்தார்.

இதன் பிரகாரம் பல வருடங்களாக வாகன உரிமையை மாற்றாதவர்கள் கூட அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் கூறினார். எனினும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியின் பின்னரான வாகன உரிமை மாற்றங்கள் குறித்தே மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளதாகலலித்தர்மப்பிரியகுறிப்பிட்டார்.(அ-2)

# அரசதரப்பினரின் பெயரை கூறினாலே அமைச்சர்கள் எழும்பிநிற்கின்றார்கள்

## அநுரகுமார .எம்.பி கிண்டல்

(கொழும்பு)

அரச பிள்ளைகளின் பெயரைக் கூறினால் அமைச்சர்கள் உடனடியாகவே எழுந்து விடுகின்றனர். அப்படியாயின் ஆளும் தரப்பு கதிரைக்குள் ஏதோ பொருத்தப்பட்டுள்ளது என்று ஜனநாயக தேசிய கூட்டணியின் எம்.பியான அநுரகுமார திஸநாயக்க சந்தேகம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு அநுரகுமார திஸாநாயக்க எம்.பி உரையாற்றும் போது விவசாயிகளை பாதுகாப்பதற்கும் அவர்களின் மேம்பாட்டிற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

எனினும் நாமல் ராஜபக்ச கார் ஓட்டுவதற்காக கொழும்பில் இரவில் வீதிகள் மூடப்படவிருக்கின்றன என்றார்.

இதன் போது அவையில் ஆளும் தரப்பில் அமைச்சர்கள் சிலர் இருந்தபோதும் அமைச்சர்கள் ஜகத் புஷ்பகுமார ஏதோ கூறுவதற்கு எழுந்தார். இடைமறித்த அநுரகுமார எம்.பி இல்லை இல்லை நான் அந்தப் பெயர்களை இனிமேல் கூறமாட்டேன்.

அமைச்சர் மித்திரபாலவின் பெயரை நான் பலமுறை கூறிய போதிலும் எவருமே இடையூறு விளைவிக்கவில்லை. எனினும் அரச பிள்ளைகளின் பெயரைக்கூறி உடனேயே எழுந்து விடுகின்றனர்.

அப்படியாயின் ஆளும் தரப்பினரின் கதிரைக்குள் ஏதோ பொருத்தப்பட்டுள்ளது என்றார். இதன் போது ஆளுந்தரப்பினர்கள் வாயடைத்து நின்றனர். (அ-2)

# த.தே.கூ.பின் 3 கோரிக்கைகளை ஒதுக்கிவிட்டு பேச்சு நடத்தலாம்

## அழைக்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான பேச்சுவார்த்தையில் அரச தரப்பால் நிராகரிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய 3 கோரிக்கைகளையும் ஒதுக்கிவிட்டு பேச்சுவார்த்தையைத் தொடரலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று காலை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போது இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் கூட்டமைப்பு முன்வைத்துள்ள அந்த 3 கோரிக்கைகளும் பிரச்சினைக்குரியது. ஆனால் அந்த மூன்று அம்சங்களைத்தவிர பல பிரச்சினைகள் தமிழர்களுக்கு உள்ளது.

பேச்சுவார்த்தை இடம்பெறும் போது முகத்துக்கு முகம் நேரடியாக உரையாடிவிட்டு வெளியே சென்று பேச்சுவார்த்தையை முறிவுக்குட்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருத்துக்களை வெளியிட்டு நடந்து கொள்கிறது. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசு அமைக்கத் தீர்மானித்துள்ள பாராளுமன்ற தெரிவு குழு தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில்இன்னும் எந்தவொரு தெளிவான முடிவையும் அறிவிக்கவில்லை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார். (அ-2)

# பேருந்து விபத்தில் 26 பேர் காயம்

உடபுசல்லாவை பொலிஸ் பிரிவில் வெலிமட- உடபுசல்லாவ பிரதான வீதியில் கம்பஹாவத்தை தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 26 பயணிகள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று காலை 6.30 அளவில் இடம்பெற்றுள்ளது. பயணிகளை ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து வீதியை விட்டு விலகி 75 மீற்றர் பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த 26 பேரும் வெலிமடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உடபுசல்லாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# சென்னை ஊடாக தங்கம் கடத்தல்

## இலங்கையர்கள் மும்முரம்

சென்னை வானூர்தி நிலையத்தில் அதிக அளவில்தங்க கடத்தல் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. இதில் இலங்கையர்களே அதிக அளவில் ஈடுபட்டு வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த வருடத்தின் ஏப்ரல் மாதத்தில் இருந்து இன்று வரையில் 63 தங்க கடத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சென்னை சுங்கத்திணைக்கள ஆணையாளர் சன்ஜை குமார் அகர்வால் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையில் இருந்து செல்கின்ற பலர் பல்வேறு நோக்கங்களுக்காக இந்தியாவில் தங்கத்தை அதிகவிலையில் விற்கும் நோக்கில் கடத்திச் செல்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்க கடத்தல் தொடர்பில் அதிக அளவிலான இலங்கையர்கள் அங்கு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)





வடக்குமாகாண கல்வித்திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடமாகாண தேசிய பாடப்புத்தக தினவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் பிரதம விருந்தினர் மாணவர் ஒருவருக்கு இலவசநூல்களை வழங்குவதனையும் கலந்து கொண்டவர்களையும் படங்களிற் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

ஒழுக்கம் பிச்சைக்கார உருவிலே இருந்தாலும் கௌரவிக்கப்படும். – ஓர் அறிஞர்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ்.அரச அதிபர் தலைமையில் கலாசார கட்டுப்பாட்டு பிரிவை உருவாக்குக!

திருமணம் ஆகாத இளவயதுக் கர்ப்பம் அடைதல் தொடர்பில் யாழ். அரச அதிபர் புள்ளி விபர ரீதியாக விடுத்த அறிக்கை நெஞ்சை இறுக்கிக் கொள்கின்றது.

நிலைமை எங்கே போய் முடியப் போகின்றதோ என்ற ஏக்கத்தின் மத்தியில்,

எங்கள் கலாசாரம் கட்டுக்குலையவில்லை. முன்பு நடக்காத எதுவும் இப்போது நடந்தும் விடவில்லை என்று வாதிடுவோரும் உளர்.

இப்போது தகவல்களைப் பெறக்கூடிய வசதிகளும் கலாசாரப் பிறழ்வு தொடர்பிலான விழிப்புணர்வும் அதிகரித்துவிட்டன. இதன் காரணமாக இளவயதுக் கர்ப்பமடைதல் குறித்த புள்ளி விபரங்கள் உயர்ந்து நிற்கின்றன என இவர்கள் நியாயம் கூறுவதுமுண்டு.

அவர்களின் வாதங்களை நாம் அடியோடு நிராகரிக்கவில்லையாயினும் தவறுகள், பிழைகள் மற்றும் கலாசாரப் பிறழ்வுகளின் குணகத்தை பூச்சியத்திற்குக் கொண்டு வருவதற்காக நாம் அனைவரும் பாடுபடுவது கட்டாயமானதாகும்.

நேற்றையதினம் கடுக்கண் பூட்டிய ஒரு இளைஞன் ஆட்டோ ஓட்டிச் செல்கின்றான்.

உள்ளே பாடசாலை மாணவி, அவருக்கு அருகில் இன்னொரு இளைஞன்.

வீதிகளில் நிலவக்கூடிய வாகன நெருக்கடிகளின் மத்தியிலும் அந்த ஓட்டோ வெட்டிமுறுக்கி ஓட்டம் எடுக்கின்றது.

மாணவியின் முகத்தில் எந்தச்சலனமும் இல்லை. ஆனாலும் அவர்களின் முக பாவனைகள் யாழ். அரச அதிபர் தெரிவித்த புள்ளி விபரங்களை மேலும் அதிகரிக்கக்கூடிதாகவே தெரிந்தது.

என்ன செய்வது! யாருக்கு அறிவிப்பது? அறிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது அந்த ஓட்டோவை மறித்து என்ன நடக்கிறது என்று கேட்டால் நிலைமை என்னவாகும்.

இப்படியான சிந்தனைகளின் மத்தியில், திரைப்படமொன்றில் இடம்பெற்ற நகைச்சுவையும் ஞாபகத்திற்கு வந்தது.

கர்ப்பவதி ஒருவரை ஆண்கள் சிலர் ஓட்டோவில் கூட்டிச் செல்கின்றனர்.

பிரசவ வேதனையால் அந்தப் பெண் துடிக்கின்றார். இதனை அவதானித்த நடிகர் வடிவேலு அந்தப் பெண்ணை ஆண்கள் சிலர் கடத்திச் செல்வதாக நினைத்து அந்த ஓட்டோவை துரத்தி மறித்து அங்கிருந்த ஆண்களை அடித்து உதைத்து பெண்ணைக் காப்பாற்ற முயற்சிக்கின்றார்.

இவை நடந்து முடிந்த பின்புதான் அந்தப் பெண் பிரசவ வேதனையால் துடித்தது தெரிய வந்தது.

பின்பு சொல்லவா வேண்டும்? வழக்கம் போல வடிவேலுவை மொங்குமொங்கு என மொங்கித் தள்ளினார்கள்.

அட! ஓட்டோவில் இருந்த மாணவி அந்த இளைஞர்களுக்கு சகோதரியாக – ஒன்றுவிட்ட சகோதரியாக – சகோதரி மாதிரியாக –சொந்தமாக இருந்தால்...

ஐயா! வேண்டாம். நம்மபாட்டில் இருப்பதே உத்தமம் என்று நினைத்துக் கொண்டோம்.

எதற்கும் கலாசாரத்தைப் பேணுவதற்கென அரச அதிபர் தலைமையிலான விசேட கலாசார கட்டுப்பாட்டு பிரிவு அல்லது அதற்கென தனிப் பொலிஸ் பிரிவு, அதற்கான தொலைபேசி இலக்கம் இருந்தால், அதனை பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தினால் தகவல்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும், கலாசார சீரழிவைக் கட்டுப்படுத்தவும் முடியும். நடக்குமா? நடந்தால் நல்லது.

# சபையில் உறுப்பினர்கள் இல்லாததால் வரவு செலவு திட்ட விவாதம் முடிவுக்கு வந்தது

பெற்றோலியத்தொழிற்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் நேற்று உரையாற்றவிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் சபையில் பிரசன்னமாகாததால் சபை நடவடிக்கைகள் உரிய நேரத்திற்கு முன்னரே முடிபிற்குக் கொண்டு வரப்பட்டன.

இந்தச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் அக்ராசனத்தில் அமர்ந்திருந்ததார்.

நேற்றையதினம் விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடவிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களில் பலர் சபையில் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய பதில் உரையை நிகழ்த்துவதற்கான சந்தர்ப்பம் பெற்றோலிய தொழிற்றுறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிற்கு வழங்கப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் விவாதத்தின் போது எதிர்க்கட்சியினருக்கு 165 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் 60 நிமிடங்கள் மாத்திரமே பயன்படுத்தியுள்ளதாக அமைச்சர், சுட்டிக் காட்டினார்.

எதிர்க்கட்சியினர் ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்தி எத்தகைய கருத்துக்களை வெளியிட்டாலும் அவர்கள் பாராளுமன்ற செயற்பாடுகளில் கலந்து கொள்ளவேண்டியது முக்கியமென அமைச்சர் கூறினார்.

இதன் பிரகாரம் பெற்றோலிய தொழிற்றுறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டது.

நேற்றைய தினம் சபை நடவடிக்கைகளை ஒத்திவைப்பதற்கான பிரேரணையை ஐ.தே.க.தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க சமர்ப்பிக்கவிருந்தார்.

இதற்கமைய அக்ராசனத்தினால் சபை நடவடிக்கைகளை ஒத்திவைப்பது தொடர்பான பிரேரணையை சமர்ப்பிக்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்ட போதிலும் ரவி கருணாநாயக்க அங்கு இருக்காததால் சபை நடவடிக்கைகள் உரிய நேரத்திற்கு முன்னரே முடிபிற்குக் கொண்டு வரப்பட்டன. (அ-2)

## கிராம அபிவிருத்தி திட்டமிடல் சட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/ 105 கிராமசேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்கு பற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ். மாநகர சபை முதல்வர் கேட்டுள்ளார். (பா)


## 46 பாலங்களை புனரமைக்க முடிவு

(கொழும்பு)

பிரான்ஸ் அரசாங்கத்தின் 22 மில்லியன் யூரோ நிதியுதவித் திட்டத்தின் கீழ் இலங்கையின் தேசிய வீதிக் கட்டமைப்பில் உள்ள 46 பாலங்களை புனரமைக்க அமைச்சரவைதீர்மானித்துள்ளது.

இத்திட்டத்திற்கான அமைச்சரவை பத்திரத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி வடமேற்கு, ஊவா, சப்பிரகமுவ, மத்தி, மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் உள்ள பாலங்களே புனரமைப்பு செய்யப்படவுள்ளன. (அ-2)




## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### தீபலக்ஷ்மி விளக்கேற்றுவதின் மகிமை

அகல், எண்ணெய், திரி, சுடர் இந்த நான்கும் சேர்ந்து தான் விளக்கு. இந்த நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் உணர்த்துவதோடு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் யோக நுட்பங்களையும் தெரிவிக்கிறது.

பொதுவாக வீட்டில் தீபமேற்றி வழிபட்டு வந்தால் மகாலட்சுமி அங்கு வாசம் செய்வாள் என்பதுடன் தீய சக்திகளும் நம்மை அண்டாது. கார்த்திகை விரதம் இருப்போருக்கு ஒளிமயமான வாழ்க்கை , உயர் பதவி, இழந்த பொருட்கள் திரும்ப கிடைத்தல் போன்ற நன்மைகள் கிடைக்கும் என்பார்கள். இது போல் ஒவ்வொரு விரதத்திற்கு தக்க பலன்கள் உண்டு.







## வெள்ளி நற்சிந்தனை

49

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

பக்தியனுபவம் பற்றி மீள நினைத்துப் பார்க்கும் அனுபவம் இறையடியார்கள் எல்லோரிடம் உண்டு.அந்த அனுபவம் அவர்களுடைய பாடல்களிலே சொல்லோவியங்களாக வரையப்பட்டுள்ளன.இவ்வாறு மணிவாசகர் தமது பக்தியனுபவத்தை மணிவாசங்களாக பாடியுள்ளார். இறைவன் தன்னைவலியவந்துஆட்கொண்ட பெருங்கருணை அவரால் மறக்க முடியவில்லை.உலக வாழ்க்கையில் மீண்டும் ஈடுபட்டபோதும் அவரது உள்ளத்திலே அழியாதகோலமாக அந்தக் காட்சி அமைந்து விட்டது.

எனவே அந்தக் காட்சியை அடிக்கடி நினைத்துப் பார்க்கிறார். திருப்பெரும் துறையிலே பரமாச்சாரியாக இறைவன் வீற்றிருந்த திருக்கோலம். திருவெண்ணீறு அணிந்த மெய்யடியார்களோடு மற்றுமுள்ள யாவரும் காணும்வண்ணம் பந்த பாசத்தையறுத்து இறைவன் பக்குவமாய் ஆட்கொண்ட அருளை நினைக்கின்றார்.குதிரை வாங்குவதற்காக பலரோடு சென்ற மந்திரி பதவியிலிருந்த மணிவாசகரோடு பலர் சென்றுள்ளனர்.ஆனால் மணிவாசகர் மட்டுமே திருவடி தீட்சை பெற்றார். கண்களிலே மகிழ்ச்சி நிறைய திருவெண்ணீறு அணிந்த மெய்யடியார்கள் பலர் நிற்கிறார்கள்.உலகியல் வாழ்வில் ஈடுபட்டவர்களும் பலர்மணிவாசகரோடு வந்து நின்றார்கள். அவர்களுக்குள்ளே மணிவாசகரை மட்டுமே இறைவன் ஆட்கொண்டு பட்டி மண் டபத்திலே ஏற்றியதாக மணிவாசகர் கூறுகிறார்.அது மட்டுமல்ல எட்டிளோடு இரண்டையும் அறியாத என்னை உயர்வடையச் செய்தாய் என வாழ்த்துகிறார். இதற்கு நான் என்ன கைமாறு செய்வேன் என அங்கலாய்த்து நிற்கிறார்.

இங்கே பட்டி மண்டம் என மணிவாசகர் குறிப்பிடுவதை நோக்க வேண்டியுள்ளது.கல்வி பயிலும் களம் என்னும் பொருளுடைய பட்டியம் என்னும் சொல் இங்கே பட்டி மண்டபம் என நின்றதென உரையாசிரியர் கூறியுள்ளார்.பட்டி மண்டம், வித்தியா மண்டபம் எனச் சிலப்பதிகாரத்திற்கு உரைவகுத்த நல்லாசிரியர் அடியார்களுக்கு நல்லார் உரை செய்துள்ளார்.(சிலப்:5:102 அடி) மணிமேகலையிலும்

ஒட்டிய சமயத்துறு பொருள்வாதிகள்

பட்டிமண்டபத்துப் பாங்றிந்தேனுமின்(மன:1:60:61) குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பராமாயணத்திலும்

பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம் (கம்பரா:நகர:62) குறிப்புள்ளது. எனவே சமயம் பற்றிய கருத்துக்களை ஆய்வு செய்யும் களமாக பட்டி மண் டம் செயற்பட்டதை இச்சான்றுகள் உணர்த்தி நிற்கின்றன.

மேலும் மணிவாசகர் திருநீறு பற்றிய நினைப்புடன் இருக்கிறார்.நீறு திருவருட்பேற்றின் அறிகுறி. நீறிட்ட அன்பர் திருவருட் பேற்றினையுடையவர்களாவர்.திருவெண்ணீற்றுக்கு வீடு பேறாக செல்வத்தை கொடுப்பது என்னும் பொருள் கொண்ட விபூதி என்ற பெயரும் வழங்கப்படுகிறது. எட்டினொடு இரண்டு பற்றிய குறிப்பையும்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மணிவாசகர்எண்ணிப்பார்க்கிறார்.எட்டு என்னும் எண்ணைக்குறிக்கும் அகரமும் இரண்டு என்னும் எண்ணைக் குறிக்கும் உகரமும் முன்னது அகரத்தைக் குறிப்பது எனவும் பின்னது உகரத்தையும் மகரத்தையும் குறிக்கும் எனவும் கொண்டு அம்மூன்றெழுத்துகளும் சேர்ந்து பிரணவத்தைத் குறிக்கும் எனவும் விளக்கம் கூறப்படுகிறது. எட்டினொடு இரண்டு பத்து.அதுவே இறைவன்பால் வைக்கும் பக்திக்குப் பெயரானதென்றும் கூறுவர்.

கட்டறுத்தெனை யாண்டு கண்ணாற நீ
றிட்ட அன்பரோடி யாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டினோடிரண்டும் அறியேனையே!








யா/உடும்பிராய் இந்து கல்லூரியின் ஒளிவிழா கற்பக விநாயகர் கலையரங்கில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினர் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை இ.ஸ்ரலின், சிறப்பு விருந்தினர் கல்லூரி அதிபர் அ.ஈ.ஸ்வரநாதன் உள்ளிட்ட விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும் மாணவர்களின் வரவேற்பு நடனத்தையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## J/Tutoring Staff positions at Urumpirai Hindu College.

**(Grade 9 to 13)**

# English language, Mathematics, Science

Send your application before December 23, Friday, 2011.

*will you ready to work after school hours, weekends and holiday?*
*if you feel, you are the right candidate for any of the positions*

Sends your curriculum vitae using the form below & forward to us

BY MAIL: UHCOSA- CANADA,
P.O.BOX 46630,3809 SHEPPARD AVE EAST,
TORONTO,ONTARIO CANADA MIT 3JO
Email:kspavan@hotmail.com
Fax:011 416750 8779 Canada

OR

The Principal
URUMPIRAI HINDU COLLEGE
PALALI ROAD,URUMPIRAI

Earn very competitive salary
quarterly performance incentives
annual bonuses,Job security

Position(s) Desired: 1.................................. 2..............................
Full name: ..................................................................................
Permanent address: ....................................................................
Telephone: .................................... Email: ................................

**EDUCATIONAL BACKGROUND**
HIGH SCHOOL: ........................ COMPLETION:................
GRADES & SUBJECTS: ..........................................................
UNIVERSITY/TECHNICAL COLLEGE:..........COMPLETION:......
PROGRAM & SUBJECTS :.......................................................

OTHER QUALIFICATIONS & EXPERIENCE *(necessary use a separate sheet)*

Summarize special job-related skills and qualifications acquired from employment or other experiences and/or state any additional information you feel may be helpful in considering your application, i.e. honors, awards,activities,technology skills or professional or communities development activities:

**ESSAY**: we are interested in your abiliy to organize and express thoughts on a specific topic or topics in a concise manner. Please select **two** of the following topics and write the essays **in separate sheets, one in English and other in Tamil Language**

1. What are the outstanding qualities students expecting from a Tutor?
2. Which temperament you would think the students like better for a tutor?
3. The Importance of Continuing Professoinal Development and How I Plan to Incorporate It Throughout My Career.
4. How Information Technology (i.e.,computers,Internet) can be integrated into the Instrucitional Process and Curriculum.

**REFERENCES:** Referances should include experience teachers, principals or professors who have first-hand knowledge of your professional competance and your personal qualifications.

1.
2.

**CERTIFICATION & RELEASE AUTHORIZATION**

I certify that all of the statements made by me are true,complete and correct to the best of my knowledge and belief, and are made in good faith. **I further certify that I am the sole author of the essay.** I Understand that any misrepresentation of information shall be sufficient cause for: (1) rejecting my candidacy,(2) withdrawing of any offer of employment,or (3) terminating my employment.

........................... ..................................................
Date Signature of Candidate (in ink)

**Note:** *email applicants-summit your* ***CV in Microsoft Word or PDF file,*** *filled with the same contents.*

(C-5136)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

# MEDIA RESOURCE AND TRAINING CENTRE

(Joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden)

## Post of Director (On Contract)

Applications are invited from suitable candidates for the post of Director (Full-time) on contact basis in the Media Resource and Training Centre, University of Jaffna upto 6th January 2012.

**Qualifications:**

i. A Degree of a recognized University and a postgraduate degree with pubilcations. priority will be given to applicants with publications related to **Media Studies;**
ii. Minimum of ten (10) years experience in academic administration and/or in an Executive position in a Government Department,State Corporation Higher Educational Institution / Institute or in a recognized N.G.O

•preference will be given to those who have experience in Leadership from both media and academic world and have vital and upto date knowledge in Media literacy and engagement with media and civil Society.

••senior Academics of Universities who are willing to undertake this position during their sabbatical leave could also apply for this position.

**Applications are expected from suitable candidates below 55 years**

**Salary:Rs.50,000/-(All inclusive fixed per month)**

•••A person may be placed at a higher salary point in consideration of his special qualifications and/or experience.

**Note:** The Candidates are required to submit **a statement of vision for the development of the MRTC**

**Selection by interview**

**General Conditions:**

This is a **full-time assignment**, initially for a period of **one year** from the date of commencement of the assignment and renewable if the services rendered and work performances during the tenure of assignment are satisfactory.

The appointee will become a contributor to the Employees provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute the EPF and the Employees Trust Fund (EPF)

Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/Academic Establishments,** University of Jaffna, Sri Lanka, either in person or by post,on a payment of Rs.100/-per application form. Those who wish to obtain application forms by post are requested to send a money order/postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23x10 c.m.in size.


Applications for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments/ Corporations and statutory Board should channel their applications through the Head of the respective Institutions.Incomplete,illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

Registrar
2011.12.08

(C-5133)

# சேவாக் அதிரடி இரட்டைச்சதம்; டெண்டுல்கரின் சாதனை முறியடிப்பு



மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான நான்காவது சர்வதேச போட்டியில் இந்திய அணித் தலைவர் வீரேந்திர சேவாக் 219 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் சர்வதேச ஒருநாள் போட்டி அரங்கில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர் எனும் சாதனைக்குரியவராகியுள்ளார்.

கடந்த பெப்ரவரி 24ம் திகதி தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் 200 ஓட்டங்களை பெற்றமையே இதுவரை சாதனையாக இருந்தது.

இந்தூரில் நேற்று நடைபெற்ற மேற்கிந்திய அணியுடனான 4 வது போட்டியில் வீரேந்திர சேவாக் 149 பந்துகளில் 219 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இதில் 7 சிக்ஸர்கள் ,25 பவுண்டரிகளையும் சேவாக் விளாசினார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டியில் தனது 15 வது சதத்தை 69 பந்துகளில் பூர்த்தி செய்த சேவாக், 140 பந்துகளில் இரட்டைச் சதத்தினை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் இந்திய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 418 ஓட்டங்களைப் பெற்றது. ஒருநாள் கிரிக்கெட் சர்வதேச போட்டியில் இந்திய அணி பெற்ற ஆகக்கூடிய ஓட்டம் இதுவாகும். கௌதம் காம்பீர் 67 ஓட்டங்களையும் சுரேஸ் ரெய்னா 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

2009 ஆம் ஆண்டு ராஜ்கோட்டில் நடைபெற்ற இலங்கை அணிக்கு எதிரான போட்டியில் 7 விக்கெட் இழப்பிற்கு 414 ஓட்டங்களைப் பெற்றமையே இதுவரை இந்திய அணியின் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது.

இப்போட்டியில் இந்திய அணி 153 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரை 3:1 என்ற கணக்கில் தனதாக்கியது.

# மூன்று விடயங்களை …

பால் சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ள வடக்கு கிழக்கு இணைப்பு, மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம், அரச காணிகளை மாகாணங்களுக்கு உரித்தாக்கல். ஆகிய மூன்று விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கொண்டவாறே தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் யோசனையை நிராகரித்தால் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லை.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாவிடின் சட்டம் மற்றும் ஒழுங்குகளை நிர்வகிக்க முடியாது. இவ்வாறு இல்லாத மாகாண அதிகாரம் எதற்கு?

அத்துடன் காணி அதிகாரமும் மாகாணங்களுக்கு பிரதானம். அக்காணி அதிகாரங்கள் வழங்கப்பட்டால்தான் பொருளாதார முன்னேற்ற திட்டங்களை மாகாண சபையால் முன்னெடுக்கமுடியும். எனவே அரசின் இந்த நிலைப்பாடு அரசியல் தீர்வை முன்வைப்பதில் அரசுக்கு ஆர்வமில்லை என்பதை வெளிக்காட்டுகிறது எனஅவர் மேலும் குறிப்பிட்டார்.(பா)

# பிரச்சினையான மூன்று…

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற அமைச்சரவையின் முடிபுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் கடந்த 6 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டிடத்தொகுதியில் இடம்பெற்ற 16வது சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த வடக்கு கிழக்கு இணைப்பு, சட்ட மற்றும் ஒழுங்கு விவகாரம், அரசாங்க நிலங்களை மாகாண சபைகளுக்கு உரித்தாக்குதல் ஆகிய விடயங்களும்தமக்குபிரச்சினையானவை.

இந்நிலையில், அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவையின் முடிபுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவிலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட

கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்த அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைத்துள்ள அந்த மூன்று கோரிக்கைகளும் பிரச்சினைக்குரியது. ஆனால் இந்த மூன்று கோரிக்கைளையும் தவிர தமிழ் மக்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. பேச்சுவார்த்தை இடம்பெறும்போது முகத்திற்கு முகம் நேரடியாக உரையாடிவிட்டு வெளியே சென்று பேச்சுவார்த்தையை முறிவுக்கு உட்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் அமைக்க தீர்மானித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் எந்தவொரு தெளிவான முடிபையும் அறிவிக்கவில்லை என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (பா)

தரம் 6 மாணவர்களிற்குரிய விசேட ஆங்கில கற்கை நெறி TKY 06

(யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக அகலத்திரையில் புறஜெக்ரர் உதவியுடன் இளவயதினருக்கு கற்பித்தல் எமது நிறுவனத்தில் மாத்திரமே)

ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களிற்கான விசேட கற்கைநெறி.

தரம் 6 இற்குரிய ஆங்கில பாடவிதானம், விஞ்ஞான, கணித, பூகோளவியல் கலைச் சொற்கள் இலக்கண வேதனையின்றி பேச்சு ஆங்கிலம்.

மாதாந்த கட்டணம் 850 ரூபாய்.

ஒரு வருடக் கற்கை நெறி

மாதாந்த தர மதிப்பீடு

பெற்றோர்கள் சந்திப்பு

(இக்கற்கைநெறி தற்போது தரம் 5 இல் எம் நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களின் வேண்டுதலின் பேரில் ஆரம்பிக்கப்படுகின்றது.)

ஆரம்பம்: சனி 2011.12.10 மு.ப. 11 மணி

7வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கானது TKY07

(யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக அகலத்திரையில் புறஜெக்ரர் மூலம் இளவயதினருக்கு கற்பித்தல் எமது நிறுவனத்தில் மாத்திரமே)

ஆங்கில எழுத்துக்களை உறுப்பமைய எழுதப் பழக்கல். சொற்பிரயோகம், வசனம் அமைத்தல், கட்டுரையாக்கம், இலக்கண வேதனை இன்றி பேச்சு ஆங்கிலமும் விளங்கிக் கொள்ளலும். பாடல்கள், கதைகள், ஆங்கிலப் பத்திரிகைகள்.

இக்கற்கைநெறி பிரபல நிபுணர்களால் குழந்தைகள் உளவியலுக்குட்பட்டுத் தயாரிக்கப்பட்டது.

அத்தோடு மாதாந்தம் பெற்றோர்களுடனான சந்திப்பு மாதாந்த தர மதிப்பீடு கற்கைநெறியின் பாதியில் உங்கள் குழந்தைகளின் ஆற்றல்கள் வெளிக்கொணரும் முகமாக அரங்க செயற்பாடுகள்.

6 வது பிரிவு

ஆரம்பம்: 2011 .12.10

சனி பி.ப. 5 மணி

✸ IELTS இல்லாமல் UK பல்கலைக்கழகம் ஒன்றில் கற்க விரும்புகிறீர்களா?

✸ கனடா செல்ல விருப்பமா?

✸ அவுஸ்திரேலியா குடிபெயர என்ன செய்ய வேண்டும்?

வாருங்கள் சனி அல்லது ஞாயிறு உங்கள் முன்மாதிரியான ஆலோசனை நிறுவனத்திற்கு




(6940)

திசை காட்டி பிறைவேற் லிமிட்டெட



முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

021 221 9016,
021 491 4527

thisaikaddi@sltnet.lk
www.thisaikaddi.lk

# ஆணைக்குழு அறிக்கை...

அமைச்சர் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு உலக நாடுகளில் வேறு எந்தவொரு விடயத்திற்கும் காண்பிக்கப்படாதளவு அக்கறையும் ஆர்வமும் காட்டப்படுகிறது.

இது விடயத்தில் இலங்கை மீது வேற்றுமை காட்டப்படுவதாகவே நாம் உணர்கின்றோம். எமது நாடு சிறிய நாடு, நாம் சிறியவர்கள் என்பதனாலா இந்த வேற்றுமை?

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் செப்ரெம்பர் 11ஆம் திகதி இடம்பெற்ற பாரிய தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கை, தாக்குதல் இடம்பெற்று ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலேயே சமர்ப்பிக்கப்பட்டது.

இருப்பினும் அந்த அறிக்கை தொடர்பில் எவரும் கேள்வி எழுப்பவில்லை. இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களும் வெளியாகவில்லை.

அப்படியிருக்கும் போது, பயங்கரவாதம் எனும் கொடிய நோயினால் சிக்கித்தவித்த எமது மக்களைக் காப்பாற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச அளவில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

அந்த நடவடிக்கைகளின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. நாம் அனைத்து விடயங்களையும் சத்தியத்திற்கு கட்டுப்பட்டே முன்னெடுத்தோம்.

அதனால் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பது தொடர்பான உண்மை விடயங்களை வெளிப்படுத்துவதில் நாம் தயக்கம் காட்டவில்லை. அதேசமயம் எங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நாமே விசாரித்து அதற்கான தீர்வினை பெற்றுக்கொள்வோம். அதற்கு வெளியாரின் தலையீடோ அல்லது ஒத்துழைப்போ எக்காலத்திலும் எமக்கு தேவைப்படாது.

### அழுத்தங்களுக்கு அடிபணியவில்லை

யுத்தக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை அவசியம் என்ற சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அடிபணிந்தோ அல்லது வற்புறுத்தல்களுக்கு பயந்தோ நாம் இந்த நல்லிணக்க ஆணைக்குழுவினை நியமிக்கவில்லை. விசாரணையினை நடத்தவும் இல்லை. இது எமது நாட்டு மக்களுக்கு ஏற்பட்டபிரச்சினை. இதற்கு தீர்வுகாணும் பொறுப்பு ஜனாதிபதிக்கும் அவர் சார்ந்த அரசாங்கத்திற்கும் உள்ளது. அதனாலேயே இந்த விசாரணையினை நடத்தியுள்ளோம்.

### அறிக்கையின் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும்

எனவே ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் எவ்வித மாற்றமுமின்றி நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இலங்கையைப் பொறுத்தவரை இது முக்கியமான விடயம். அதனால் அறிக்கையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் உன்னிப்பாக வாசிக்க வேண்டும். அவை தொடர்பில் கவனத்திற்கொள்ள வேண்டும். எனவே அதற்கு கால அவகாசம் தேவை. இது அவசரப்பட்டு எடுக்கப்படக் கூடிய முடிபுகள் அல்ல. சிந்தித்து நிதானமாக நிறைவேற்றப்பட வேண்டியவை.

### இலங்கைக்கு எதிரான சதியில் முக்கிய சக்தி

இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதன் வெளிப்படையான உண்மை என்னவெனில், இலங்கைக்கு எதிராக ஒரு சக்தி இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதேயாகும். அந்த சக்தியை முறியடித்து இலங்கைக்கு எதிராக நடவடிக்கைகளை தோற்கடிப்பதற்கான வேலைத்திட்டங்கள் சத்தியத்திற்கு உட்பட்ட வகையில் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (பா)


பாடசாலை அதிபர்களுக்கு
**பாடப் பதிவு**
**பாடக்குறிப்பு**
ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு(தரம் 1 முதல் தரம் 13 வரையிலான வகுப்புகளுக்குரிய பாடப்பதிவு புத்தகங்கள் வெளிவந்துவிட்டன. உடன் பெற்றுக்கொள்ளலாம்.
*கிடைக்குமிடங்கள்*
**தயா அச்சகம்**
138, நாவலர் றோட் (மனோகராச் சந்தி), யாழ்ப்பாணம்.
**சிவதயா அச்சகம்**
575, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
TP:0215672342,0773965214
(6948)



**A/L அரசியல்**
2012
Paper Class
sat, sun: 12-1
முழுப்பாடத்திட்டம் முடிக்கப்படும்
ஆரம்பம் – 10.12.2011 (சனிக்கிழமை)
K.சுகாஷ் (LLB)
A/L 2013
புதிய பிரிவு ஆரம்பம்
sat, sun: 9-10
விடுமுறை காலத்தில் வகுப்புகள் நடைபெறும்
DCM
யாழ். நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
(6938)



YOGI'S
(Academy of Beauty Tharapy, Hair Dressing & Home Science)
பண்டிகைக் கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புகள்
3 நாட்கள் மட்டும்
2011 December 17-ம், 18-ம், 19-ம் திகதிகளில் காலை 10 மணி முதல் இலகுவாகவும், வித்தியாசமாகவும், விரைவாகவும் செய்யும்
6 கேக் கலவைகள்
6 பேஸ்ரி வகைகள் (Pastries)
6 Sweets வகைகள்
வகுப்புகளில் சேர் விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.
75,அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
Phone: 021 2222796
077 7164923
(C-5101)



நியூ ரீயூசன் சென்ரர்
கோண்டாவில்
கல்வியாண்டு 2012
தரம் 3 - தரம் O/L
MATS: திரு. S. மகேந்திரன், திரு. S. தேவகுமார், திரு. S. செந்தில்குமரன்
SCI: திரு. இரா செல்வவடிவேல், திரு. A. துரைராசா, திரு. S. றஜீவன்
TA: திரு. S. நவநீதன், திரு. K. பாலசண்முகம், திரு. M. நித்தி, செல்வி. S. கஜெந்தினி
ENG: திரு. S. சந்திரமௌலி, திரு. S. சுதர்சன், திரு. T. மகாதேவன், செல்வி. தர்சிகா
HIS/GEO/CIVICS: திரு. M. வேலா, திரு. A. மயூரன், திரு. S. கஜீபன்
REL: திரு. M. நித்தி, செல்வி. S. கஜெந்தினி
COM: திரு. A. செந்தூரன்
English Medium Class
ஆரம்பம் : 10.12.2011 சனி 6 மணி



புதிய யாழ் நகரின் No.1 கல்வி நிறுவனம்
நாவலர் கல்வி நிலையம்
புதிய கல்வியாண்டு 2012
தரம் 01 முதல் O/L வரை
தமிழ் மொழி மூல வகுப்புக்கள்
English Medium Classes
ஆரம்பம் 10.12.2011 சனி மாலை 3.00 மணி
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
- அமைதியான பாதுகாப்பான சூழலில் கற்பித்தல்
- English Medium Classes for Grade 6 To 11
- சிறந்த கல்வி, கண்டிப்புடன் கூடிய கட்டுப்பாடு, அதி உயர் பெறுபேறு
- யாழ். நகரில் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
- மாதாந்த தவணைப் பரீட்சையும், கணிப்பீட்டு அறிக்கை வழங்கலும்
- Special Computer Classes, Grade 01 To 11
(C-5140)



கார் வாடகைக்கு
மிகவும் குறைந்த விலையில் அதிநவீன சொகுசு கார்கள் வாடகைக்கு கிடைக்கும். திருமண வைபவங்களுக்கும் மாத, வார, நாள் வாடகைக்கு கிடைக்கும்

0776237546

(6937)



கணக்கீடு நாளை ஆரம்பம்
பிரத்தியேக வகுப்புகள் A/L
2012 கம்பனிக் க/கு (Sat & Sun (5 - 6 P.M)
2013 இ/நட்ட க/கு (Sat & Sun (4 - 5 P.M)
by: ஜெ. தமிழ் அழகன் B.Com(Acc.Spl), H.N.Dip in Acc.
ROYAL ACADEMY
T.C.T. அருகில் நாவலர் வீதி, நல்லூர். T.P.:0776137444
(6939)



அழகுக்கு அழகு சேர்க்கும் நவீன தர பட்டுப்புடைவைகளுக்கு
நாடவேண்டிய ஒரே ஒரு புடைவை சாம்ராஜ்யம்

நல்லூர்
சரவணா புடைவையகம்
NALLUR
SARAVANA TEX

770,772, K.K.S Road, Thaddatheru Junction, Jaffna. T.P.: 021 222 0421 Fax: 021 222 0421
526, 529, Pointpedro Road, Nallur, Jaffna. T.P.: 021 222 1723 Fax: 021 222 1723
Email: nallur.saravana@gmail.com
526, பருத்தித்துறை வீதி, நல்லூர் வீதி(பின் வீதி), சிவன் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.
770,772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.



புதிய வகுப்புகள் ஆரம்பம்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
இணையற்ற சேவையினூடு...
மாணிக்க விழா மகுடம் 40 1973 - 2013
40 ஆவது ஆண்டில்....
தரம் 03 முதல் O/L வரை
ஆங்கில/தமிழ் மொழி மூலம் வகுப்புகள்
The Express Institute
Irupalai, Kopay.




## இதய அஞ்சலி

### திரு.விஜயரட்ணம் கமலநாதன்

(முன்னாள் முகாமையாளர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்-நல்லூர்)

எங்கள் தேவஸ்தானத்தின் வளர்ச்சியில் சிறுபராயம் முதல் அர்ப்பணிப்புடன் பங்காற்றியவரும் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தின் வளர்ச்சியில் உன்னத பங்காற்றியவருமாகிய

**திரு. வி.கமலநாதன்**

அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா துர்க்காதேவியின் திருவடியில் சாந்தியடையப் பிரார்த்தித்து எமது இதய அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
(6934)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.